நிர்வாக ஆசிரியர் :
ஜே. டி. ஆசிர்வாதம்


# சாரணர்

ஜய, தை | 37 | 1955 ஜனவரி

அன்பர்பணி செய்ய எனையாளாக்கி விட்டால்
இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே.

— தாயுமானவர்.

| பொருளடக்கம் | | பக்கம் |
|---|---|---|
| போங்குக போங்கல்! | 'ரவி' | 3 |
| பயிற்சி ஆணையாளர் மாநாடு | .... | 4 |
| மகாத்மாவின் பொன்மொழிகள் | .... | [illegible] |
| 'சாரணர்', 'வழிகாட்டிகள்' பெயர் ஏன்? | .... | 7 |
| பாலவீர ஆசிரியர் பயிற்சிமுகாம் | .... | 11 |
| சைகை முறைக் கவாத்து | எம். ராஜகோபாலன் | 12 |
| சமூக பொழுது போக்குப் பயிற்சி | ஜே. டி. | 15 |
| எங்கள் இலங்கைப்பயணம் | 'புரு' | 17 |
| சாரணீய விளையாட்டுகள் | ரா. சுந்தரம் | 26 |
| சாரணீய வேலைகள் | L. அஸ்வத்தநாராயணன் | 27 |
| திரிசாரணர் பயிற்சிக் குறிப்புகள் | R. S. & M. S. P. | 30 |
| கண்ணன் சொல்லும் கதை | மேஜர். கே. ரா. | 33 |
| செய்திகள் | .... | 35 |



★

நேயர்கள்

அனைவருக்கும்

எமது

அன்பார்ந்த

புதுவருட

வாழ்த்துக்கள்!

★

# பொங்குக பொங்கல்!

— ரவி —

மாய்க்கும் பனியே மறைந்து ஒழிய
சாய்க்கும் ஒளிசேர் கதிரே வருக!
மாயிருள் அகல பாய்கதிர் மிளிர
வாய்த்திடும் அறிவே திருவே வருக!

தையெனும் திங்களே "தைதை" யெனவே
மெய்யெலாம் சிலிர்க்க தளிரடி சிவப்ப
தமிழே தளிர்க்க இனிமை கூட்டி
அமிழ்த நடனம் ஆடியே வருக!

மனநிறை வாழ்வே மலர்ந்து பொங்க
கனவில் சுவைசேர் தேனும் கரும்பும்
மங்கலங் குறிக்கும் மஞ்சள் விளங்க
எங்கும் பொங்குக எழில்மிகு வளமே!

நிறைநீர் பொங்க நிறைகதிர் சாய
நிறைமனம் மகிழும் குறைவிலா உழவன்
மனமெனும் பானையில் மகிழ்ச்சிப் பாலும்
தினமும் பொங்கத் தீந்தமிழ் வாழிய!

தாயகம் வாழிய! தனித்தமிழ் சுவையே
பாயும் பண்புசேர் பல்வளம் வாழிய!
மேவும் சேவையே மேலெனக் கொள்ளும்
கூவும் குயில்நிகர் ***சாரணர்*** வாழிய!

210616.

# அனைத்திந்திய சாரணப் பயிற்சி

# ஆணையாளர் மாநாடு.

தற்போதையப் பயிற்சித் திட்டத்தைப் பரிசிலனை செய்யவும், இன்றையத் தேவைகளை யொட்டியும், பழைய அனுபவங்களை வைத்தும் புதிய திட்டங்களை உருவாக்குவதற்கும், தேசீய ஆணையாளர் டாக்டர் ஹிருதயநாத் குன்ஸ்ரு அவர்களின் அழைப்பிற் கிணங்க ஆண்பெண் சாரணரின் பிரதிநிதிகளாக முப்பத்தைந்து பயிற்சி ஆணையாளர்கள் 26-12-54ல் மத்திய பிரதேசத்திலுள்ள பச்மாரியில் கூடினர்.

மத்திய பிரதேசத்தில் எழில் தவழும் சாத்பூர மலையின் மடியில் சுமார் 3500 அடிக்குமேல் முழு வளர்ச்சி பெற்று, அழகு பூத்துக் குலுங்கும் மலை வாழ்வகமே பச்மாரி. அது சுற்றுலா வருவோர்க்கு ஓர் சுவர்க்கமே. இயற்கைக் குகைகள், கல்விலே தீட்டப்பெற்ற கவின் ஓவியங்கள், பச்சைப் பசேலென்ற மலையுச்சிகள், தண்ணிலவின் பொன்வார்ப்போ என ஐயுறும்படி பண்ணிசை ததும்பி வழிய ஓடிவரும் நீர்வீழ்ச்சிகள், நீந்து குளங்கள், இயற்கைக் குளிரகங்கள் ஆகியவை நிறைந்த இடம். இயற்கை எழிலோடு நிற்காமல் கோடைகாலத்தில் இன்ப வாழ்வகமாகவும் விளங்குகிறது பச்மாரி. மத்திய புகைவண்டி நிர்வாகத்தின் இட்டார்ஸி-ஜபல்பூர் மார்க்கத்தில் உள்ள திப்பேரியா புகைவண்டி நிலையத்திலிருந்து முப்பத்திரண்டுமைல் தூரத்தில் உள்ளது பச்மாரி. அடிக்கொருமுறை திப்பேரியாவிலிருந்து பச்மாரிக்கு பஸ் சர்வீஸ் இருக்கிறது. ஏறக்குறைய பச்மாரி இந்தியாவின் மத்தியபாகத்தில் உள்ளது.

மாநாட்டுப் பிரதிநிதிகளிடையே நிலவிய நட்புணர்ச்சி பாராட்டும் விதத்தில் இருந்ததோடு மட்டுமல்லாது விவாதத்தின் மாறுபட்ட கருத்துக்களை நேர்மையாகப் பரிமாறிக்கொள்ளவும், செயல் முறைகள் பற்றிய முடிவுகளில் ஏகோபித்த முடிவுகளை ஏற்கவும் உதவியது. தாராதேவி மாநாட்டின் கருத்துரைகளுக்கு ஏற்கவும், வெவ்வேறு மாநிலங்களில் நடைபெற்ற பயிற்சியைப் பொறுத்தும் பரிசிலனை நடைபெற்றது.

சென்னை மாநிலப் பிரதிநிதிகள் :-

1. திரு. வி.எஸ். இரத்தினசபாபதி, D. C. C. மாநிலச்செயலாளர்.
2. ,, ஜே. ஐ. முத்தையா, D.C.C., S.O.C., கோவைப்பகுதி
3. ,, எம். இராசகோபாலன், D.C.C., S.O.C., மதுரைப்பகுதி
4. குமாரி. எஸ். பி. துரைராஜ், Jt. S.O.C. பெண்கள்பகுதி
5. திரு. வி. பி. இராமசாமி, A. D. C. C. கூனூர்.
6. ,, ஏ. சுயம்பு, A. D. C. C. தஞ்சை.
7. ,, பாலகிருஷ்ணன், A. D. C. C. தஞ்சை.
8. ,, ஜே. டி. ஆசீர்வாதம், A. D. C. C. மதுரை.

தேசிய தலைமையகத்தைத்தவிர, டெல்லி, ராஜஸ்தான், பம்பாய், வங்காளம், மத்திய பிரதேசம், பஞ்சாப், உத்தரப்பிரதேசம், போபால், ஆந்திரம், திருவிதாங்கூர்-கொச்சி, ஐதராபாத், சென்னை மற்றும் ரயில்வேத்தொகுதி முதலிய பல்வேறு மாநிலங்களும் பிரதிநிதிகளை அனுப்பி வைத்திருந்தன. பச்மாரியைப்பற்றி முழுவிவரம் தெரிந்த சாரணத் தலைமை ஆணையாளர் திரு. ஜஸ்டிஸ் விவியன் போஸ் அவர்கள் பார்வையாளர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து தந்திருந்தார்கள். திரு. போஸ் அவர்களைத் தவிர வேறு யாராலும் இத்தகைய வசதிகளைச் செய்து தந்திருக்கமுடியாது. ஆகையால் இம் மாநாடு திரு. விவியன் போஸ், திருமதி. விவியன்போஸ் ஆகியோர்க்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறது.

மத்திய பிரதேச அரசியலாரும், முதன் மந்திரி கனம் பண்டிட் ரவிசங்கர் சுக்லா அவர்களும் அனைத்திந்திய சாரணீய ப்பயிற்சித் தலம் அமைப்பதற்காக நாற்பது ஏகரா நிலமும், அதில் அமைக்கப்பட வேண்டிய கட்டிடங்களுக்காகவும், பயிற்சிமுகாமுக்காகவும் ரூ. 20000 (ரூபாய் இருபதினாயிரம்) நன்கொடையும் கொடுத்தருளினார்கள். பார்வையாளர்கள் அவ்விடத்தைக் கண்டு, சுற்றிச் சார்ந்த இயற்கை எழிலில் மயங்கினார்கள். இது மிகமுக்கிய இடமாக சீக்கிரத்தல் வளங்குமென்று மாநாட்டினரால் கருதப்பட்டது. ஹிமாலயா வுட் பாட்ஜ பயிற்சிமுகாம் ஒன்று அடுத்த ஏப்ரலில் இங்கு நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

மாநாட்டில் வந்த சில தீர்மானங்கள் :

1. ஹிமாலயா - வுட்பாட்ஜ் தேர்வுக்குரிய சின்னங்கள் தற்சமயம் இருந்து வருபவைக்குப் பதிலாக, ஸ்கார்ப் முனையின் சதுரப்பட்டையில் இமயமலையின் எழில்மிக்க பனிச் சிகரங்களின் உருவத்தைத் தீட்டவும், தோலுக்குப் பதிலாக நீலவர்ணப் பட்டுக்கயிற்றில் சந்தனக் கட்டையாலான மணிகள் தொடுக்கவும் முடிவு செய்யப்பட்டது.

2. வரும் ஆண்டுகளில் கிராமிய சாரணீயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். தேசிய ஆணையாளரால் அமைக்கப்படும் எழுவர் கொண்ட மத்திய குழு அதற்கான திட்டங்களைத் தீட்டவேண்டும்.

3. ஐந்தாண்டுத் திட்டத்தில் புதிய இந்தியாவை அமைக்கும் தேசிய விரிவுச்சேவை (National Extention Service), கூட்டு விரிவுத் திட்டம் (Block Development), கிராமப் புணர் நிர்மாண சேவை (Rural Department), இளைஞர் முகாம் திட்டம் முதலிய சமூக நலத்திட்டங்களுக்கு நம் சங்கம் முழு ஒத்துழைப்பையும் நல்க வேண்டும்.

சென்னை மாநிலப் பிரதிநிதிகள் இந்த முக்கியமான விஷயங்களில் பெரும் பங்கெடுத்து அரிய கருத்துக்களை நல்கினர். பச்மாரி மலையின்பல்வேறு அழகு தவழ் பகுதிகளிலே வானமே கூரையாகக் கொண்டு மாநாட்டின் பலநிகழ்ச்சிகள் நடந்தேறின.

தேசிய ஆணையாளர் டாக்டர் ஹிருதயநாத் குன்ஸ்ரு அவர்களின் ஆற்றலும், அறிவுமிக்க தலைமையே மாநாடு வெற்றி பெறக் காரணமாயமைந்ததெனில் மிகையாகாது.

துவக்க உரையிலும்,முடிவுரையிலும் தேசிய ஆணையாளர் நம் நிறுவனத்தில் துலங்கும் ஒற்றுமையுணர்வைப் பாராட்டினர். அவ்வுணர்ச்சி என்றும் காக்கப்பட வேண்டுமெனவும், நம் இயக்கத்தில் புத்துணர்ச்சி பூக்கச்செய்து, அவ்வுணர்வின் ஒளியிலே நம் தாயகத்தின் முன்னேற்றத்திற்காக நாட்டின் தேவையைச் சேவையால் பூர்த்திசெய்யவும் ஆற்றல் மிக்க இளைஞர் அணி அமைக்க வேண்டும் எனவும், அதற்கு மன நிறைவும், விசுவாசமும் ததும்பும் ஒத்துழைப்பை ஒவ்வொரு மாநிலமும் தரவேண்டும் என்றும் கூறி, இளைஞர் பரம்பரைக்காக இந்திய மாநிலங்கட்குத் தம் சேவையை நல்குவதாகவும் கூறினர்.

மாநாட்டுப் பல்வேறு செயல் முறைகளில் இசைக்கேளிக்கையும் ஒன்ருகும். பச்மாரி கண்டோன்மெண்ட் மக்களால் அமைக்கப்பட்ட கான்ஸர்ட் இசை பச்மாரி கிளப் தலைவரான திரு. டி. சில்வா அவர்கள் தலைமையில் டிசம்பர்29உ நடத்தப்பெற்றது.

---

## மகாத்மாவின் பொன்மொழிகள்.

ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலும் உண்மை இருக்கிறது. அதைத் தேடிக் கண்டு பிடிக்கவேண்டும். நான் கண்ட உண்மை தனக்கு எப்படி வழிகாட்டுகிறதோ, அப்படியே ஒருவன் நடக்க வேண்டும். அதே சமயத்தில், நான் கண்ட உண்மைக்கேற்பவே நடக்க வேண்டும் என்று மற்றவர்களைக் கட்டாயப்படுத்த யாருக்கும் உரிமை கிடையாது.

மறு உலகத்தில் இந்துக்களென்றும், கிருஸ்தவர்களென்றும், முஸ்லிம்களென்றும் கிடையாது என்பது என் நம்பிக்கை. அங்கே அவர்களுடைய விலாசங்களும், உத்தியோகங்களும் கவனிக்கப்பட மாட்டாது. அவர்களுடைய செயல்களுக்கேற்றவாறுதான் அங்கு நியாயத் தீர்ப்பு செய்யப்படும்.

மதம் என்று சொல்லும்போது நான் சம்பிரதாய மதத்தைக் குறிப்பிடவில்லை. நான் சொல்லும் மதம், எல்லா மதங்களிலும் அடங்கியிருக்கிறது; அது நம்மையும் நம்மைப் படைத்தவரையும் சந்திக்கச் செய்கிறது.

வேதங்கள் மட்டும்தான் தெய்வத்தன்மை உடையவை (மற்றவை அப்படியல்ல) என்பதை நான் நம்பவில்லை. பைபிள், குரான், ஜெண்டு அவெஸ்தா ஆகியவையும் வேதங்களைப் போலவே தெய்வத் தன்மை உடையவை என்பது என் கருத்து.

கடவுளை இமயமலைக் குகையில் காணலாம் என்று எனக்குத் தோன்றினல், நான் உடனே அவ்விடத்தை நோக்கிப் புறப்படுவேன். ஆனல், அவரை மனித சமூகத்தை விட்டு வெளியே காண முடியாது என்று எனக்குத் தெரியும்.

(காந்திஜி சிரார்த்த தினம்: 30—1—55.)

---

# சாரணரியக்க ஸ்தாபகர் பையன்களை 'சாரணர்' என்றும், பெண்களை 'வழிகாட்டிகள்' என்றும் ஏன் அழைத்தார்?

சாரணர்கள் பிறர் தம்மைப் பின்பற்றக்கூடியவாறு அந்நிய நாடுகளில் கூடத் துணிவாக முன்னேறவும், அறிமுகமில்லாத அபாயங்களில் சமயோசிதமாகவும் வீரமாகவும் சமாளிக்கவும், எவ்வகைத் திடீர்ச் சம்பவங்களிலும் இறங்கிச் சேவை புரியத் தயாராகவும், கடின உடல் உழைப்புகளில் பங்கு கொள்ளவும், பதுங்கி மறைந்து வெளிவரவும், கைச்சமையல் செய்து கொள்ளவும், தன்னைத்தானே பேணிக் கொள்ளவும், திறமை வாய்ந்தவர்கள் என்று ஸ்தாபகர் உணர்ந்தார்.

வழிகாட்டிகள் முன் நடந்து, மலை — காடு — மடு — ஓடைகளைத் தாண்டிச் செல்லவேண்டிய பிரயாணிகளுக்கு வழிகாட்டும் மலைவாசிகளான புருஷரைப் போன்றவர்கள். சுவிஸ் நாட்டு வழிகாட்டிப் பெண்களில் இத்துறையில் பயிற்சி பெற்ற ஒருத்தியைத் துணைகொண்டு எவராவது ஒரு மலை நாட்டைக் கடந்து சென்றால், அவள் சிலாகிக்கத்தக்க முறையில் விவேக மிகுந்தவள் என்றாவது; இச்சேவைக்குப் பொருத்தமானவள் என்றாவது நிச்சயித்து விடமாட்டார். இந்த வழி காட்டிப் பெண்களுக்குச் சகாக்களும் இருக்க மாட்டார்கள். தாங்களாகவே புதுப் புது வழிகளை யமைத்துச் சிரமப்பட்டு அனுபவம் பெறத் துணிவார்கள். எதிர்பாரா விதமாகத் திடீரென்று மலைப்பிரதேசங்களில் இவர்களைச் சந்திக்கும் பனிமலைச் சரிவு, மூடுபனி, வெள்ளப் பிரவாகம், விலங்குகளின் தோற்றங்களால் நிகழக் கூடிய சம்பவங்களில் தைரியமாக நின்று சமாளிக்கத்தக்க ஆயத்தமு முள்ளவர்களல்ல. சாந்தமும், தமது செய்கருமத்தில் நிச்சயமும், விழிப்பும், தம் சகாக்களில் பலவீனர்களுக்கு உதவி செய்யும் பெருங் குணமும் வாய்ந்தவர்கள். பாலம் அமைத்தல், பனிமலையில் படிகளை வெட்டி வைத்தல், சமையல் செய்தல், குடிசை நிர்மாணித்தல், காயமுற்றோரை எடுத்துவரத் தக்க அவசரத்தூளி யுண்டாக்குதல் ஆகிய சத்கருமங்களில் சமர்த்துடையவர்கள். இவர்கள் உற்று நோக்கி உண்மை காணும் பயிற்சி பெற்ற காரணத்தால் ஒரு அபாயம் நிகழு முன் "அபாயம்" என்றே ஒரு சேதியை முன்னால் அனுப்புகின்றவர்கள். கடின வேலைகளை உவப்புடன் மேற்கொண்டு பணியாற்ற வருவதன்றி, பிறரையும் அச்சேவையில் பின் தொடர்ந்து வரச் செய்யும் சம்பிரதாயமும் உள்ளவர்கள். எளிதான வழிகளிகளைப் பின்பற்றுதல் அவர்களுக்கு வேடிக்கையாகவே இருக்காது. கஷ்டங்களை மேற்கொள்ளுதல், அபாயங்களில் சிக்கி அதிலிருந்து விடுபடுதல், உன்னதமான நிலையில் செய்ய முடியாதவொரு பணியைச் செய்தல் ஆகிய

துணிவுகளால் தங்கள் வாழ்க்கையில் இன்புற விரும்புகின்றவர்கள். இவ்வுன்னத சேவைக்குத் தைரியமும், கையாளும் திறமை கலந்த தேர்ச்சியும், பரந்த அறிவும் அவர்களுக்குத் தேவை. அவர்கள் வாழ்க்கைப் பாதை கடின மாயினும் அவைகளில் இன்பத்தையும் நுகர்ந்து ஆனந்திக்கின்றனர் என்றும் கண்டார்.

இவைகளே "சாரணர்கள்" அல்லது "வழிகாட்டிகள்" சமுதாயத்தினரின் வாழ்க்கைப் போங்குகளாகும். திடபுருஷர்களின் நிலைக்கு இந்த இளைஞரை அல்லது வாலிபச் சிறுமிகளை ஒப்பிட்டுப்பார்ப்பது விபரீத அபிப்பிராயமாகும் என்பதாக உலகிலுள்ளோர் ஓர் காலம் கருதினதுண்டு. தீர்க்க திருஷ்டி படைத்த பேதன்பவல் பிரபு தாம் கண்ட நூதன இயக்கத்தை அனுதாப மிகுந்த இவ்வுலகுக்கு அறிமுகம் செய்வித்தபோது, அனுதாப குணமற்ற இவ்வுலகம் அவரது பணியை ஏளனம் செய்யத் துணிந்தது. அக்காலத்தில் அநேக ஜனங்கள் தங்கள் கடிதங்களைத் தபாலில் சேர்ப்பதற்குத் தங்கள் பையன்களை நம்பாதிருந்தனர். எங்கே கடிதத்தைத் தபாலில் சேர்க்காமல் தன் சேப்பில் வைத்துக்கொண்டு விடுவானோ என்ற அவநம்பிக்கையால் மூடப்பட்டிருந்த சமயத்தில் பேதன்பவல் பிரபு பையன்களைப் போல ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தார். இவர்களும் வயது வந்த புருஷர்களைப் போன்ற உபயோகத்திற்கு உகந்தவர்கள் என்ற உண்மையைக் கண்டிருந்தார். அவ்வமயம் "மேவ்கிங்" நகரை எதிரிகள் முற்றுகை செய்திருந்தபோது அவர்களை எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்த பட்டாள வீரர்களுக்குப் பையன்கள் மூலமாகத் தூது அனுப்புதல், தண்ணீர் எடுத்து வழங்குதல், நெருப்பு உண்டாக்குதல் போன்ற அவசிய உதவிகளைச் செய்து வெற்றி கண்டார். இவ்வகைச் சேவைக்குப் பையன்களே தகுந்தவர்கள் என்றும், யுத்த சமயத்திலும், சமாதான காலத்திலும் தேசத்திற்குப் பெரிய நன்மைகளை உண்டாக்கக்கூடும் என்கிற திட நம்பிக்கையும் கொண்டார். அவரது இத்தகைய கனவு விரைவில் நனவானது. உலகத்திற்கு சாரணர் சேவை இந்நாள் வரை இன்றியமையாதவை என்றாகி விட்டது. வாலிபச் சிறுமிகளும் சாரணர்களைப் பின் தொடர்ந்து பணியாற்ற ஆர்வங்கொண்டு, சாரணீய தத்துவங்களை நன்குணர்ந்து, அப்பணிக்குத் தங்களைச் சேவகிகளாக அர்ப்பணம் செய்து தாங்களாகவே சுமார் இரண்டு வருடகாலம் தனித்து இயங்கிக் கொண்டிருந்தனர்.

வாலிபச் சிறுமிகளை "வழிகாட்டிகள்" என்ற காரணப் பெயரால் அழைப்பதைவிட வேறு சிறந்த பெயர் சாரணீயக் கர்த்தருக்குப் புலப்படவில்லை. "கடினப்பணிகளில் கலந்து போராடித் தாங்கள் இன்புறுவதோடு பிறரையும் தங்களைப் பின்பற்றுமாறு செய்கின்றனர்" என்னும் பேதன்பவல் பிரபுவின் மனைவியாருக்கு இப்பெண் இனத்திற்குச் சிறந்த கிரீடமாகவே விளங்குகின்றது. இதுவே எக்காலத்திறமை வற்ற நற்பயன்.

வாலிபப் பையன்களின் சேவையை மிகுந்த ஆர்வத்தோடு

இன்றைய உலகம் எதிர்பார்க்கிறது. ஒவ்வொரு நாடும் தனக்கென இத்தகைய ஒரு வாலிப இயக்கத்தை உருவாக்கி, அதை ஆதரித்துக் கொண்டு வருகின்றது. இந்த இயக்கத் தீயை மூட்டி வைத்த மகானுபாவர் பூஜித பேதன்பவல் பிரபு. அவருக்கு எக்காலத்திலும் வெற்றி உரித்தாகட்டும். இதை வாசிக்கும் நீர் ஒரு சாரணராக அல்லது வழிகாட்டியாக இருந்தால் உமது சாரணீயக் கர்த்தாவின் நம்பிக்கைக் களஞ்சியத்தில் கடனாக நீர் வாங்கப் பெற்றவர் என்றும், அன்னாருக்கு நீர் கடனாளி என்றும் உணர வேண்டும். உங்கள் சாரணீயத் தந்தை வாலிபப் பையன்களிடத்தும், வாலிபச் சிறுமிகளிடத்தும் ததும்பி வழிகின்றன ஊக்கம், திறமை, சாமாத்தியம், ஆகிய நற்குணப் பண்புகளில் பெருங்காதல் கொண்ட பெரியார்!

### "வழிகாட்டி" இயக்கத்தின் தோற்றம்.

1908ம் ஆண்டில் "பையன்களுக்குச் சாரணீயம்" என்னும் புதிய நூலை பேதன்பவல் பிரபு எழுதி வெளியிட்டார். அதைக் கண்ணுற்ற இளைஞர் உலகம் எண்ணிறந்த பையன்களைச் சாரணர்களாக்கிக் கொடுத்துச் சாரணீயக் கர்த்தாவை ஆதரித்து, சாரண இயக்கம் ஆழமாக வேரூன்ற உதவினது. இந் நூல் வாலிபச் சிறுமிகளின் கவனத்தை யிழுத்து அவர்களும் இவ் வரிய பணிக்குத் தங்களை அர்ப்பணம் செய்யுமாறு தூண்டிற்று.

இங்கிலாந்து, ஸ்காத்லாந்து, வேல்ஸ் முதலிய நாடுகளில் வாலிபச் சிறுமிகள் சிறு சிறு அணிகளை வகுத்து, "பையன்களுக்குச் சாரணீயம்" என்னும் நூலில் தாம் கண்ட தத்துவங்களை அடிப்படையாக வைத்து, அவ்விதிகளின்படி இயங்கத்தொடங்கினர். ஓர் முதியவரை அணுகி, அவரைத் தங்கள் இயக்கத்திற்குத் தலைவராகச் சில காலம் இருந்து வருமாறு விண்ணப்பித்துக் கொண்டனர். அவ்வாறே அவரது தலைமையில் தங்கள் இயக்கத்தை ஊக்கமாக நடத்தி வந்தனர். பல அணிகளாகப் பிரித்து பணியாற்றி வந்தனர். மிகுந்த பொறுமையைத் தங்களுக்கு அணிகலமாகத் தெரிந்து கொண்டு, கடினமாகப் பாடு படவும், தாங்களும் தேசப் பணிக்கு உபயோகமுள்ளவர்கள் என்கிற அந்தஸ்தைப் பெறவும் சித்தமாயினர். பின்னர் சாரணீய கர்த்தாவுக்கு ஒரு மனுச்செய்து தங்கள் இயக்கத்தை அங்கீகரித்து, பணியாற்றும் செயல் முறைகளைக் கண்டு ஆசிகூறி ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும், அவரது புனித இயக்கத்தில் தங்களையும் அங்கமாக்கி உதவ வேண்டுமென்றும் விண்ணப்பித்தனர். பேதன்பவல் பிரபுவுக்கு சிறுமிகளின் மனுவில் கண்ட விண்ணப்பங்களில் எவ்விதக் கவனமும் உண்டாகவில்லை. அவர்கள் பணியில் எவ்விதக் கவர்ச்சியும் அன்னாரின் உள்ளத்தில் தோனாது தொழிந்தது காரணமாக சாரணர் இயக்கத்தில் வாலிபச் சிறுமிகளின் பணியாற்று தலைச் சேர்த்துக்கொள்ள வில்லை. ஏனெனில் அன்னாரின் உள்ளம் பையன்களின் தீரம், வீரம், நற்குணத்திறம், ஊக்கம் ஆகிய அபூர்வப் பண்புகளால் மூடப்பட்டிருந்தது. சிறுமிகளின் நற்பண்புகள்

அன்னாரின் உள்ளத்தில் இடம்பெற முடியவில்லை.

இதனால் பெண்களின் ஊக்கம் தளரவில்லை. தனித்த இயக்கமாக இருந்து இயங்கி வருவோம் என்ற திட சங்கற்பத்தோடு முன்னிலும் அதிகமான ஊக்கத்தோடும், உற்சாகத்தோடும், பணியாற்றி வந்தனர். தங்கள் அவாவுக்குத் தோல்வி கண்டதினால் பின் வாங்கிவிடவுமில்லை. இவர்களின் அரும் முயற்சிக்கு வெற்றி காணும் சமயமும் வெகு சமீபத்திலேயே இருந்தது என்பதை வாலிபச் சிறுமிகளும், சாரணீயக் கர்த்தாவும் அறிந்து கொள்ளவில்லை. 1909ம் ஆண்டில், செப்டம்பர் மாதத்தில், நல்ல அருணோதயத்தில் காலமாரி தூவிக் கொண்டிருந்த சுபவேளையில் லண்டன்மாநகரிலுள்ள பளிங்கு அரண்மனையின் முன் பதினோராயிரம் சாரணர்கள் அணி வகுப்பு நடத்தப் போகின்றார்களென்றும், அவ்வணி வகுப்பைப் பார்வையிட பேதன் பவல் பிரபு பிரசன்னமாகின்றார் என்றும் கேள்விப்பட்டு, அன்னாரது திருஷ்டி தங்களின் அணிகள்மீதும், பணிகள் மீதும் பதியவேண்டுமென்ற பெரும் நோக்குடன் அவ்விடத்துக்கு லண்டன்மா நகரின் பல பகுதிகளிலிருந்து வாலிபச் சிறுமிகளின் அணிகள் காக்கிச் சட்டை உடையோடும், மாட்டுக்காரப் பிள்ளைகளின் தொப்பியோடும் புற்றீசல் போற் கிளம்பிச் சாரணர்கள் அணி வகுத்து நிற்கும் மைதானத்திற்கு அருகில் வந்திருந்துகொண்டு, சாரணீயக் கர்த்தாவுக்கு ஒரு கடிதம் அனுப்பினர். அந்த லிகிதத்தில் "பெண் சாரணர்கள் வந்துளோம். எங்கள் அணி வகுப்பையும் பார்வையிட்டு, எங்கள் இயக்கத்தையும் அங்கீகரித்து, எங்கள் அணிகளையும், பணிகளையும் ஆசீர்வதித்து ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்பதாகக் கண்டிருந்தது.

இவ்வேண்டுகோளை நிராகரிக்கும் தைரியம் நம் ஸ்தாபகருக்கு இருக்கவில்லை. அவர்களை வரவேற்று, அவர்களின் அணிவகுப்பைப் பார்வையிடவும், அவர்களின் தளரா ஊக்கம், உற்சாகம், விடாமுயற்சியைப் பாராட்டி ஆசிகூறி அங்கீகரிக்கவும் சித்தமானார். அவர்களுக்குப் பெண் சாரணர் என்ற பெயர் பொருத்தமில்லை எனவும், தனிப்பெயர் இருப்பதே தகுதி எனவும் கருதி, தமது திருவாய் திறந்து நீங்கள் "வழிகாட்டிப் பெண்கள்" என்ற திருநாமகரணஞ் சூட்டி அவர்கள் பணியை நன்குமதித்தார். இந்தியா தேசத்திலுள்ள பிரபல மலைவாசிகளான வழிகாட்டிகளின் புராதன வீரச் செயல்களைத் தாம் நேரிற் கண்டு வியந்தவரானதாலும், சுவிச்சர்லாந்து நாட்டின் வழிகாட்டிகளின் உபயோகப் பணிகளைக் கண்டறிந்தவரானதாலும், பெண்கள் வழிகாட்டிகளாகவும், ஆண்கள் கஷ்டங்களைத் தாண்டிச் செல்லும் வீரர்களாகவும் விளங்கவேண்டுமென்றே விரும்பினார். தமது விருப்பம் 1914ம் ஆண்டில் பூத்து மலர்ந்ததின் விளைவாக "வழிகாட்டிப்பெண்கள்" என்ற சாரணீயர் நூலை வாலிபச் சிறுமிகளுக்கு எழுதி வைத்து, அவர்களும் சாரணர் விதிகளைத் தழுவிச் செயலாற்றி வருமாறு திட்டங்களும் வகுத்தருளினார். ஓங்குக சாரணீயம்! வளர்க சாரணீயம்!!

---

# பாலவீர ஆசிரியர் பயிற்சி முகாம்.

மதுரை நகரசபைப் பள்ளிகளில் சாரணர் இயக்கம் வெகு துரிதமாக முன்னேறி வருவதை யொட்டி, பாரத் சாரணர் சங்கத்தின் புதிய முறைகளில் ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது. வார இறுதிகளில் நடைபெற்ற இந்தப்பயிற்சியின் முடிவு முகாம் டிச. ௨ தேதி துவங்கி கோச்சடை முனிசிபல் நீர் நிலையத் தோட்டத்தில் நடைபெற்றது. மதுரை மேற்குப் பகுதி உதவிக் கமிஷனர் ஸ்ரீ J. D. ஆசீர்வாதம், A.D.C.C. முகாம் தலைவராயிருந்தார். ஸ்ரீ S. தீர்த்தம், A.D.C. ஸ்ரீ K.S. சம்பத் C.S.O. ஆகியோர் முறையே குவார்ட்டர் மாஸ்டராகவும், முகாம் உதவியாளராகவும் இருந்தனர். ஸ்ரீ M. ராஜகோபாலன் S. O. C. ஸ்ரீ தீர்த்தம், ஸ்ரீC.N. சேதுராமன் ஆகியோர்வகுப்புக்கள் நடத்துவதில் உதவினர்.

டிச. 5உ இம் முகாமின் பார்வையாளர் தினம் கோச்சடையிலேயே நடைபெற்றது. ஜில்லா சங்க உபதலைவர் ஸ்ரீ R. நாகராஜ் அவர்கள் தலைமைவகித்து பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் பொறுப்புகளையும், மேல் நாட்டினரின் சில நல்ல பழக்கங்களை பற்றியும் அழகாக எடுத்துரைத்தார்.

முகாம் தலைவரின் மேற்பார்வையில் பயிற்சியாளர்கள் "இலங்கைப்பயணம்" என்ற வினோதமான விளையாட்டை நடத்திக்காண்பித்தனர். இதன் பிறகு ஜில்லாக் கமிஷனர், டாக்டர் K. G. ராமபத்ரன் அவர்கள் மதுரையில் சாரணரியக்கம் தழைத்தோங்க நகரசபையாரும், முக்கியமாக முனிசிபல் கமிஷனர் ஸ்ரீ T. M. ராமசாமி M. A. (Cantab) அவர்களும் விசேஷ ஆதரவளித்து வருவதற்கு நன்றி தெரிவித்துப் பேசிய பிறகு, முதல் முகாமில் பயிற்சி பெற்றவர்களுக்கு அத்தாட்சிப் பத்திரங்களை ஸ்ரீ ராமசுவாமி அவர்கள் வழங்கினர். பயிற்சியாளரில் ஒருவரான ஸ்ரீ ராஜநாயகம் முகாம் வாசிகளின் சார்பாக தமது அனுபவங்களையும், பயிற்சியின் நன்மைகளையும் விவரித்தார். ஸ்ரீ ஆசிர்வாதம் வந்தனம் கூற தேசிய கீதத்துடன் விழா முடிவுற்றது. விழாவிற்கு நகரிலிருந்து மதுரை ஜில்லா பெண்கள் பகுதிக் கமிஷனர், திருமதி (டாக்டர்) எடி, உதவிக் காரியதரிசி, திருமதி A. S. மஹாராஜா, மற்றும் ஜில்லாக்கமிட்டி மெம்பர்களும், பிரபல கனவான்களும், சீமாட்டிகளும், சாரணருமாக ஏராளமானபேர் விஜயம் செய்திருந்தனர்.

---

சிறு குழந்தைகளின் மூலம் அன்பின் நியதியைப் புரிந்துகொள்ள முடியும் என்பதையும், கற்றுக்கொள்ள முடியும் என்பதையும் நான் கண்டறிந்திருக்கிறேன். அறியாமை சூடி கொண்டிருக்கும் பெற்றோர்களாகிய நாம் மட்டும் தலையிடாமல் இருந்தால், குழந்தைகள் ஒருவித சூது வாதையும் அறியாமலே இருப்பார்கள்.

★ ★

குழந்தைகளின் வாயிலிருந்து அறிவு ஞானம் பிறக்கிறது என்று ஏசு சொன்னார். இதைவிடப் பெரிய பெருமைவாய்ந்த உண்மையை அவர் சொன்னது கிடையாது. அவர் சொன்னதை நான் நம்புகிறேன். பணிவோடும், சூதுவாதில்லாமலும் குழந்தைகளை அணுகினோமானால் அவர்களிடமிருந்து அறிவு ஞானத்தை நாம் கற்றுக்கொள்ளுவோம் என்பதை என் அனுபவத்திலேயே பார்த்திருக்கிறேன்.

—மகாத்மா காந்தியின் பொன் மொழிகள்.


# சைகை முறைக் கவாத்து.

## (DRILL BY SIGNS)

எம். ராஜகோபாலன்,
ஸ்டேட் ஆர்கனைசிங் கமிஷனர், மதுரை.


(சென்ற மாதத் தொடர்ச்சி)

**படை அடுக்காக நிற்க.** (Group in file.)



படையிலுள்ள எல்லோரும் ஒருவர் பின் ஒருவராய் நிற்கவேண்டுமானால், படத்தில் காட்டியபடி வலது கையை முன்புறம் தோள் மட்டம் தூக்கி நீட்டு. முட்டி திறந்து, உள்ளங் கை கீழ்நோக்கி யிருக்கவேண்டும்.

இதிலேயே அணிவாரியாக நிற்கவேண்டு மென்றால் முதலில் 'அணிவாரி' சைகையைக் காட்டி, பிற்பாடு 'அடுக்கு' சைகையைக்காட்ட வேண்டும்.





**அணிகள் அடுக்காக நிற்க.** (Patrols or Sixes in files).





இரண்டு கைகளையும் முன்புறம் தோள்மட்டம் சமமாய்த் தூக்கி நீட்டு. முட்டிகள் திறந்து, கீழ்புறம் நோக்கி யிருக்கவேண்டும்.


ஒரு அணிக்கும் அடுத்த அணிக்கும் நடுவில் இரண்டு காலெட்டுகள் இடைவெளி யிருக்கவேண்டும்.



**அரைவட்டமாய் நிற்க.** (Group in Semi-Circle.)




இருகைகளையும் படத்தில் காண்பித்த படி அரை வட்டம் போல் உடம்பைச் சுற்றி அசைத்துக் காட்டவும். கைகளைப் பின்புறம் முடிந்த வரையில் கொண்டு போகவேண்டும்.





இதில் அணிவாரி யாய் நிற்பதற்கு 'அணிவாரி' சைகையை முதலில் காண்பிக்கவும். அணிகளுக்கு நடுவில் இரண்டு காலெட்டுகள் இடைவெளி தேவை.

இதுவரை விவரித்தவை பாலவீரர், புல்புல் சிறுமிகள் உள்பட பொதுவாக எல்லோருக்கும் உபயோகப்படுபவை. இனிவரும் சில கவாத்துக்கள் முக்கியமாக பாலவீரர், புல்புல்களைத்தவிர, இதர சார ணர்க்கே மிகவும் பயன்படும்.


**ஆரக்கால் வடிவத்தில் நிற்க.** (Group in spokes or arrow formation).



படத்தில் கண்டபடி இருகைகளை யும் தலைக்குமேல் உயர்த்தி, விரல் நுனி களைத் தொடும்படி பிடித்துக்காட்டவும். அணிகளின் தலைப்பில் இரண்டுகாலெட் டுகள் இடைவெளி வேண்டும். அணித் தலைவர்கள் அவரவர் அணியின் வலப் புறமாகவும், உதவி அணித்தலைவர் உட் பட மற்றப் பையன்கள் அவரவர் உய ரத்தை யனுசரித்தும் நிற்கவேண்டும். குட்டையானவர் முன்புறமும், அதிக உயரமுள்ளவர்கள் படிப்படியாய்ப் பின் புறமும் ஒருவர்பின்னொருவராய் நிற்க, அணிகள் ஆரக்கால்களைப்போல் இருக்க வேண்டும்.



நெருக்க வரிசையில் நிற்க. (Group in close column of Patrols.)



புஜங்களிரண்டையும் முன்புறம் சமமாய்த் தோள்மட்டம் தூக்கி, முன்கைகளை செங்குத்தாய் உயர்த்திப்பிடி. முட்டிகளை மடக்கி, உள்ளங்கை உட்புறமாயும், விரல் மொளிகள் வெளிப்புறம் நோக்கியும் இருக்க வேண்டும். அணிகளுக்கு நடுவில் இரண்டு காலெட்டுகள் இடைவெளி வேண்டும்.




திறந்த வரிசையில் நிற்க. (Group in open column of Patrols.)



புஜங்களை முன்புறத்திற்குப் பதிலாக இரு பக்கங்களிலும் உயர்த்தி, நெருக்க வரிசைக்குரிய சைகை போல் காட்டு. இதில் அணிகளுக்கு இடையிலுள்ள தூரம் ஏழு காலெட்டுகளாகும். அணித் தலைவர்கள் அவரவர் அணிக்கு முன்புறமாக நடுவில் ஒரு காலெட்டுத் தூரம் தள்ளி நிற்பார்கள்.




(தொடரும்)

**1955ம் ௵ இனாம்!**

‘சாரணர்’ பத்திரிகைக்கு புதிய சந்தாதாரைச் சேர்த்துக் கொடுங்கள்!

உங்களில்

5 புதிய சந்தாதாரைச் சேர்ப்பவர்களுக்கு ஸ்ரீராம்பாஜ்பாய் அவர்கள் படம் இனாம்
10 புதிய சந்தாதாரைச் சேர்ப்பவர்களுக்கு 1955௵ பாரத் சாரணர் நாட்குறிப்பு „
15 புதிய சந்தாதாரைச் சேர்ப்பவர்களுக்கு 1955 வருடம் முழுவதும் “சாரணர்” பத்திரிகை இனாம்.

இந்தப் பரிசுத் திட்டம் 1955 ௵ பிப்ரவரி முடிய அமுலிலிருக்கும். பரிசு பெற்றவர்களின் பெயர்கள் ‘சாரணர்’ பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

‘சாரணர்’ பத்திரிகை சந்தா ஒரு வருடத்திற்கு ரூ. 1—0—0 தான்.

நிர்வாக ஆசிரியர்.

# சமூக பொழுது போக்குப் பயிற்சி.

மதுரை ஒய். எம். சி. ஏ. சங்கத்தின் ஆதரவில் ஸ்ரீமான் ஹாரி டி. எட்கிரன் B.P.E., M.A., M.P.E. Ed. D., என்பவரால் யுவபுரி ஒய். எம். ஸி. ஸி. காம்பவுண்டில் டிச. மீ 13௳ முதல் 15ம்௳ முடிய (Recreation Leadership Training) சமூக பொழுதுபோக்கு பயிற்சி முகாம் நடந்தது. அதற்கு ஆண்களும், பெண்களுமாக 45 பேர் வந்திருந்தனர். அவர்களில் 31 பேர் மதுரை ஜில்லா பாரத் சாரணர் சங்கத்திலிருந்து அனுப்பப்பட்ட சாரண ஆசிரியர்கள்.

காலை முழுவதிலும் உபந்நியாசங்களும், முன் மாலைப்பொழுதில் பயிற்சி அப்பியாசங்களும் பிந்தின மாலைப் பொழுதில் படக் காட்சிகளும் நடைபெற்றன.

ஷெ முகாமில் ஏழு விஷயங்களில் உபந்நியாசங்கள் தகுந்த உபகரணங்களுடன் நடந்தன. அவை 1. Drama in Recreation: பொழுது போக்கில் நாடகத்தின் இடம். எந்தெந்த விதமாக சிறுவருக்கும், வாலிபருக்கும், முதியோருக்கும் ஊக்கமூட்டும் நாடகங்கள் எப்படி எப்படி நடத்தலாம் என்பது.

2. Sports in Recreation: பொழுதுபோக்கில் விளையாட்டுகள், பந்தாட்டங்கள், ஓடுதல் முதலியன, அவை விளையாடும் சுலபமான முறை, முதல் முதல் பயிற்சியளித்தல், அவற்றில் அப்பியாசம் முதலியவைகள் சொல்லப்பட்டன.

3. Crafts in Recreation: பொழுது போக்கில் கைவேலையின் இடம்: மரம், காகித அட்டை, தோல், வெண்கலம், களிமண் முதலியவற்றில் வேலை செய்தல், நெசவு, மணி கோர்த்தல், படம் பிடித்தல் முதலிய அந்தந்த மனப்பான்மையுள்ளவர்க்கு ஏற்றவாறு நடத்தலாம்

4. Music in Recreation: பொழுது போக்கில் சங்கீதத்தின் இடம்: தனித் தனியாகவோ, இரண்டு பேர் அல்லது நான்கு பேர் சேர்ந்தோ கூட்டமாகவோ பாட்டுகள் பாடி சமுதாயத்தை மகிழ்விக்கலாம்.

5 Nature in Recreation: பொழுது போக்கில் இயற்கையின் இடம்: புஷ்பங்கள், மரங்கள், பறவைகள், நட்சத்திரங்கள் இவைகளைக் கவனித்துப் பார்த்துப் பெயர் சொல்லுதல், பாறைகள் முதலியவற்றைக் கவனித்தல், உலாவச் செல்லுதல், வன போஜனம் செய்தல் முதலியவை.

6. Games in Recreation: பொழுது போக்கில் சாதாரண விளையாட்டுகள்: நேர் வரிசையில் நின்று விளையாடுதல், வட்டமாக நின்று விளையாடுதல் முதலிய பல மாதிரி விளையாட்டுகள்.

7. Dance in Recreation: பொழுது போக்கில் நடனத்தின் இடம். கும்மி, கோலாட்டம், கிராமாந்திர நடனம் முதலியன.

மாலைப் பொழுதில் இவை ஒவ்வொன்றிலும் பகுதி பகுதியாகச் சுட்டிக்காட்டி வந்திருந்தோர் அனைவரும் பங்கு பெற்று பயிற்சி அடைந்து கொள்ளும்படி செய்தார். பின் மாலையில் படக்காட்சிகள் மூலம் பிறதேசங்களில் குழந்தைகள், வாலிபர் எப்படி விளையாடுகிறார்கள் என்று காட்டப்பட்டது. சில இடங்களில் ஒரு பட்டணத்தார், அல்லது கிராமத்தார் சேர்ந்து அதற்கென்று ஒரு நிர்வாகக் குழு ஒன்று ஏற்படுத்தி, அதற்கென ஊரார் ஒத்துப்பேசி வரி தண்டி, விளையாடுமிடங்கள் ஒதுக்கி ஷடி உல்லாசப் பொழுது போக்குக்கு வசதி செய்கிறார்கள். சுகமான சமுதாயம் உண்டாவதற்கு இது உதவியாக இருக்கிறது.

இவ்விதமான சமூகப் பொழுது போக்குகள், கிராமத்தில் உள்ள சண்டைகள், விவகாரங்கள் திருட்டுகள் முதலியவை குறைவதற்கும் ஏதுவாக இருக்கின்றன. இந்தப் பயிற்சி முகாம் நடத்தப்படுவதற்குத் தகுந்த இடம் மதுரை யுவபுரி கட்டிடம் என்று சொல்வது மிகையாகாது.

---


## விற்பனைக்குத் தயார்!

| | | ரூ. அ. பை |
|---|---|---|
| பாலவீரர் தேர்ச்சிக் குறிப்பு 50 பாரம் | .... | 1—0—0 |
| சாரணர் தேர்ச்சிக் குறிப்பு 50 பாரம் | .... | 1—0—0 |
| புல்புல் சிறுமிகள் தேர்ச்சிக் குறிப்பு 50 பாரம் | .... | 1—0—0 |
| படைத் தலைவர்கள் ரிக்கார்டு 50 பாரம் | .... | 1—12—0 |
| பாரத் சாரணர் பிளாக் நிர். 1 | .... | 3—0—0 |
| ஷை நிர். 2 | .... | 2—0—0 |
| சாரணர் பாட்டுக்களும், சிம்ம நாதங்களும் | .... | 0—6—0 |
| பண்டித ஸ்ரீராம் பாஜபாய் போட்டோ | ... | 0—4—0 |
| ஸ்கார்பு வளையம் (மூங்கிலில் அழகிய சின்னம் பொறித்தது) | | 0—3—0 |
| ஸிக்ஸர் கைவளையம் | ... | 0—4—0 |
| கமிஷனர் ஸ்கார்ப் (பர்ப்பிள்) | ... | 1—8—0 |
| ஜில்லா ஸ்கவுட்மாஸ்டர், கப்மாஸ்டர், ரோவர் லீடர் ஸ்கார்ப் (மஞ்சள்) | .... | 1—8—0 |
| பிரசிடெண்ட், காரியதரிசி, மெம்பர்கள் ஸ்கார்ப் (பச்சை) | | 1—8—0 |
| சாரணர் காக்கி துணி பெல்ட்டு | .... | 1—4—0 |
| பாரத் சாரணர் டைரி, 1955 (தமிழ்) | .... | 0—9—0 |

கௌரவ காரியதரிசி, பாரத் சாரணர் சங்கம்,
41, வடக்காவணிமூல வீதி, மதுரை.

# எங்கள் இலங்கை பயணம்.

'புரு'

ஹார்வி திரிசாரணர் குழு, மதுரை.

(ஆகஸ்டு இதழ்த் தொடர்ச்சி)

பொழுது சரியாகப் புலரவில்லை. வீறு நடை போட்டு—வீறு நடை யாவது வெறி நடையாவது!– தளர் நடை போட்டு ஒரு கட்டிடத்திற்குப் போய் சேர்ந்தோம். கட்டிடத்தை ஒரு முறை சுற்றி வருவதற்குள் நண்பர்களிலே பலர் பாதையில் தூங்கிக் கொண்டிருந்தனர்! 'அட தூக்கமே, உன் சக்தியே சக்தி!' என்று வியந்தேன்.

"விடிந்தால் குழாயில் கூட்டம் அதிகமாகிவிடும். இப்போதே காலைக்கடன்களை முடித்தும் குளித்தும் விடுங்கள்," என்று துணைத் தலைவர் அறிவித்தார். இரண்டு மூன்று பேராக காரியத்தில் ஈடுபட்டனர். பொழுது புலர்ந்தது—எங்கள் குளிப்பும் முடிந்தது. ஆனால் குழாயடியிலே கூட்டம் கூடவே இல்லை! எங்கள் வண்டியிலே வந்த கூட்டம், ஏற்கனவே அங்கு தங்கியிருந்த கூட்டம் இவைகள் தான் தலைவரின் அறிவிப்புக்குக் காரணம். ஆனால், ஏன் எல்லோரும் குளிப்பதில் அக்கரை காட்டவில்லை என்ற வினவிற்கு விடை பின்னால் கிடைத்தது.

ஒளி வர, இருள் நீங்கிற்று! உள்ளத்திலே உவகை பொங்கிற்று. சுற்றுப் புறத்தை உற்று நோக்கினேன். மரங்கள் நிறைந்த மணற்பாங்கான இடம்! சாலைகளும், கட்டிடங்களின் அமைப்பும் மிகவும் கவர்ச்சிகரமானதாக இருந்தன. ஆனால் அங்கிருந்த மிகவும் தாழ்ந்த கூரையையுடைய அடைக்கப்படாத கொட்டகைக் கட்டிடங்கள் இரண்டைப் பார்த்ததும் களிப்பு,கலக்கமாக மாறியது. அவைகளிலே தேன் கூட்டிலே ஈக்கள் அடைந்த மாதிரி மக்கள் கூட்டம்! உழைப்பைக் கொடுக்கப் போகிற தொழிலாளர்கள் அவர்கள்.

அடுத்த கூடாரத்தில் சிலர் நாடு காணச் செல்பவர். பலர் இலங்கையிலே முதல் போட்டு வியாபாரம் செய்கிறவர்கள்! தாய் நாட்டிலே இருக்கும் தொடர்பு காரணமாக இடையிடையே வந்து செல்பவர்கள்! இவர்களைத் தவிர இங்கு கலாசாலைகளில் படிக்கும் இலங்கை இந்திய வியாபாரிகளின் மக்கள் சிலர். நாங்களும் இக்கூட்டத்தோடு இருக்கவேண்டியவர்கள் தான்!எங்களுடைய உடை வைத்திய சோதனை அலுவலகத் திண்ணையில் தங்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது!

மணி ஏழடித்தது! "நாங்கள் இங்கு எவ்வளவு நேரம் தங்க வேண்டியிருக்கும்?" என்றேன், பக்கத்திலே நிற்கும் ஒருவரைப்

பார்த்து. அவர் நகைத்தார்! கேள்வியில் நகைப்பதற்கு என்ன இருக்கிறது என்று அவரை வெறித்துப் பார்த்தேன்.

"நீங்கள் எவ்வளவு நாட்கள் தங்கியிருப்பீர்களோ எனக்குத் தெரியாது. ஆனல் நான் வந்து மூன்று நாட்கள் ஆகிவிட்டன!" என்றார். திகைத்தேன். இலங்கை செல்ல அனுமதி பெறவே மூன்று நாட்கள் என்றால் பாக்கியுள்ள மூன்று நாட்கள் பயணத்துக்கே காணாதே என்று மருண்டேன்!

"என்ன சார்! இதற்கே இப்படித் திகைக்கிறீர்கள். ஒரு வாரம் தங்கியிருப்பவர்களும் இருக்கிறார்களாக்கும்! ஆனல் உடல் நோகாமல் உடனே செல்ல அனுமதி பெறுபவர்களும் இருக்கிறார்கள்! நீங்களும் உங்கள் உடையின் மதிப்பால் உடனே செல்ல அனுமதிக்கப்படலாம்!" அந்த நேரத்தில் சாலை வழியே அலுவலகம் சென்ற வைத்திய அதிகாரியையும், கட்டுப்பாடு அதிகாரியையும் எங்களுடைய உடை கவர்ந்து விட்டது.

"நீங்களெல்லாம் சாரணர்களா?" என்ற வினு எழுந்தது, கட்டுப்பாடு அதிகாரியிடமிருந்து. 'ஆம்' என்ற எங்கள் பதில் அவரை ஆனந்தப்படுத்தியது என்பதை அவர் எங்களை அனுமதிச் சீட்டு (Passports) கொண்டு வரும்படி கூறியதிலிருந்து அறிந்தோம். எளிதில் நாம் அனுமதி பெறலாம் என்ற நம்பிக்கை எழுந்தது.

"சார்! சாரணர் என்ற தகுதி உங்களுக்குச் சடுதியில் அனுமதி பெற வாய்ப்பளிக்கலாம். ஆனல் பிறர்படும் அவதியை நீங்கள் அறிய வேண்டியது மிக அவசியம்! இன்னும் சிறிது நேரத்தில் மக்கள் கூட்டம் அலுவலகங்களை முற்றுகையிடும் காட்சியைக் காணத் தவருதீர்கள்!" என்று கூறி அகன்றார் என்னுடன் பேசிக் கொண்டிருந்தவர். அவர் வார்த்தைகளிலே கோப உணர்ச்சியும், பொறுமை உணர்ச்சியும் குறிப்பாகத் தோன்றின. அவர் அனுபவித்த துன்பங்கள் அவர் பொறுமையைச் சோதித்து விட்டன போலும்! அவரைக் குறை கூறி என்ன பயன்?

"என்ன வெங்கடாசலம், இரும்புத் தூணு நிற்கிறீங்க? இந்த இடத்தை விட்டு எப்போது விடுதலை கிடைக்கும் என்ற ஏக்கமா? கவலைப் படாதீங்க! நாம் சீக்கிரமே போய் விடலாம்!" என்றார் துணைத் தலைவர் திரு. தீர்த்தம்.

"இப்பொழுது நம் கவலையில்லை. நமக்கு முன்பே வந்து நாட்கணக்காகக் காத்திருக்கும் பிறர் நிலை கண்ட கவலைதான் ஓங்கி நிற்கிறது" என்றேன். வேதனைச் சிரிப்போடு வெளியேறினர் அவர், ஆகவேண்டியவற்றைக் கவனிக்க. அவரையும் பிறர் நிலை பாதிக்காமலா இருக்கும்? அன்பு இதயம் அக்கிரமக்காரனிடத்திலும் தான் உண்டு. ஆனல் அதை வெளியே கிளம்ப முடியாதபடி மடமையும் அகங்காரமும் தடுத்து விடுகின்றன. எனவே இரக்கம் அவன் உள்ளத்தே எழுவதில்லை. சாரணர் அன்பே உருவாக இருக்க வேண்டியவர்கள். அவர்கள் உள்ளம்பசுமையானது. ஆகவேதான் எந்த உணர்ச்சிமிக்க சம்ப

வழும் அவர்கள் உள்ளத்தைத் தொடுகின்றன. அன்பு சுரக்கிறது! இரக்கம் பிறக்கிறது! சேவை செய்ய வேண்டுமென்ற உணர்ச்சி தோன்றுகிறது. அப்பேர்ப்பட்ட சாரணர்களுக்குத் தலைவரல்லவா திரு. தீர்த்தம்? மற்றவர் நிலைகண்டு மன வேதனைப் பட்டார். இந்த இரக்க உணர்ச்சி அவருடைய சாரணர்களிடையும் இருக்கிறது என்பதை என் பதிலில் கண்டு மகிழ்ந்தார். எனவே தான் வேதனையும், மகிழ்ச்சியும் ஒருங்கே அவருடைய முகத்திலே தவழ்ந்தன என்று என் மனம் கூறியது. அவருடைய அடக்கமான பண்பை வியந்து கொண்டு நின்ற என்னை இடித்துக்கொண்டு சென்றார் ஒருவர். என்ன அவசரமோ என்று திரும்பிப் பார்த்தேன். கலைந்த புற்றுகளிலிருந்து எறும்புகள் அலைமோதுவதைப் போல மக்கள் அங்குமிங்குமாகப் போய்க் கொண்டிருந்தனர். அதிகமாகச் சென்ற கூட்டத்தைப்பின் தொடர்ந்தோம். குடியேற்ற அதிகாரி அலுவலகத்திலே போய்ச் சேர்ந்தோம்.

அங்கு நூற்றுக்கணக்கானவர்கள் காத்துக் கிடந்தனர். அனுமதிச் சீட்டையும் (Passport), ஈட்டுப் பத்திரத்தையும் (Quarantine Passes) அவைகளைக் கொண்டு வரும் ஆளையும் கட்டுப்பாடு அதிகாரி பார்வையிட்டுத் திருப்தி அடைந்த பின் குடியேற்ற அதிகாரியிடம் அத்தாட்சி பெற அனுப்புவார். அவர் கேட்கும் கேள்விகளுக்குப் பதிலளித்து அவரைத் திருப்திப் படுத்தினால் தான் அனுமதி கிடைக்கும்!

மணியைப் பார்த்தேன். 8-30. கப்பலுக்கு வண்டி மத்தியானம் 1-45க்கு. ஆனால் அலுவலக வேலை நேரம் 12 மணி வரை தான்! இருக்கும் 3½ மணி நேரத்திற்குள் அங்கு கூடியிருந்த ஒவ்வொருவரையும் பார்த்து அனுப்புவதானால் எப்படி முடியும்? இது காரணம் பற்றித் தான் அநேகர் தங்கும்படி நேரிடுகிறது போலும்!

எங்களுடைய மனுக்கள் இடம் பெறுவதில் முதன்மையாக இருந்தனவே தவிர, நாங்கள் அனுமதி பெற்று வெளியேறும் பொழுது அலுவலகம் மூடும் நேரமாகிவிட்டது. காரணம் சாமி வரங் கொடுத்தாலும் பூசாரி வரங் கொடுப்பதில்லை என்பதைப் போல் அங்கும் சில "அரிப்புகள்" இருந்தன. அரிப்புக்குத் தான் வழியில்லை. எனினும் காலத்தையாவது கடத்தி மனத்தைத் திருப்திப் படுத்திக் கொள்ளலாம் என்று எண்ணி விட்டனர். அவ்வளவே!

காத்துக் கிடந்த நேரத்தில் சூழ்நிலையைக் கவனித்தேன். வைத்திய அதிகாரி அலுவலகத்திலே ஒரு வரிசையில் மக்கள் சட்டை, உள்ளணி (பனியன்) முதலியவற்றை நீக்கிக் குளிக்கப் போவது போல் நின்றனர். பக்கத்தில் நின்றவரைப் பார்த்தேன். அவர் என் குறிப்பை அறிந்துகொண்டு சொல்லலானார். வேறொன்றுமில்லை. 'அம்மை குத்தியிருக்கிறதா? வாந்தி பேதி (Cholera) ஊசி போடப்பட்டிருக்கிறதா?' என்பதைப் பார்த்து இப்போது நோய் நொடி இருக்கிறதா என்பதைச் சீக்கிரமாகவும் எளிதா

கவும் சோதனை செய்து அனுப்புவதற்கு, முன் ஏற்பாடு தான் இது!"

வரிசை நீண்டு கொண்டே இருந்தது. கூர்ந்து நோக்கினேன். உள்ளே சென்றவர்கள் திரும்பவும் வரிசையிலே காணப் பட்டார்கள். நான்: இது என்ன சென்றவர்களே மீண்டும் வருகிறார்கள்? அவர்: இந்த அலுவலகத்திற்குள் மற்றொரு பாகத்தில் இந்திய அரசாங்கப் பாதுகாவலர் (Protector) இருக்கிறார். அவரும் பார்வையிடவேண்டும் பிரயாணிகளை. நான்: இவர்கள் அனுமதித்து விட்டால் போய் விடலாமல்லவா! அவர்: ஓ! ஆனால் அது அவ்வளவு எளிதல்லவே! கொஞ்சம் சந்தேகப் பட்டாலும் யாரும் நிறுத்தப்படலாம்! ஊசி போட்டதற்குச் சரியான சான்றுகள் இல்லையானால் அவர்களே ஊசியைக் குத்தி பலனைத் தெரிந்துகொள்ள மூன்று நாட்கள் இருக்க வைத்து விடுவார்கள். அநேகமாக அத்தாட்சிப் பத்திரங்கள் இல்லாதவர்களுக்குத்தான் இந்த நிலை!

நான்: ஓகோ!

அவர்: அதோ பாருங்கள்!

நான்: அதென்ன குளிக்கும் அறையா? ஏன் இவ்வளவு துணிகளைத் துவைக்கக் கொண்டு போகிறார்கள்?

அவர்: (நகைத்து) அது குளிக்கும் அறையுமல்ல! அவர்கள் துவைக்கப் போகவுமில்லை! அது தான் போகும் மக்கள் தொத்து வியாதிக் கிருமிகளைக் கொண்டு போய் விடாமல் தடுப்பதற்காகத் துணிகளை நீராவியால் சுத்தம் செய்யும் இடம்.

நான்: அட கஷ்டமே!

"கஷ்ட நஷ்டமிருக்கட்டும். டே! அப்பா! உன்னை அழைக்கிறாங்க உன் அழகைக் காட்டிட்டு வா!" என்று முழங்கினார் ஒருவர்.

எங்கள் சோதனைகள் முடிந்தன. சீக்கிரம் சாப்பிட்டுவிட்டுப் புகை வண்டிக்குக் கிளம்ப எண்ணிச் சாப்பிடச் சென்றோம். அந்த சாப்பாட்டின் மகிமையை எடுத்தால் விவரிக்க இயலாது. அனுபவித்தால் தான் புரியும்!

பருத்திக் கொட்டை மாதிரி சோறு. பக்கத்திலே தொட்டுக் கொள்ள ஒரு அப்பளம். ஒரு துவையல், ஒரு "சூப் கூட்"! அதாவது வாழைக்காயும், சீனிக் கிழங்கும் (சக்கரை வள்ளிக் கிழங்கு) சேர்ந்து தயாரிக்கப்பட்டது. அது என்ன என்றேன். ஒருவர் "சூப்" என்றார். மற்றொருவர் "கூட்டு" என்றார். இரண்டில் எதுவும் பொருத்தம் இல்லாததால் இரண்டையும் சேர்த்து 'சூப் கூட்' என்று பெயரிட்டோம்! சோற்றைத் தட்டி (கொட்டி!) அதன் மேல் ஏதோ ஒரு வகைத் திராவகத்தை விட்டான். சாம்பார் என்று எண்ணிக் கொண்டோம். அதைச் சேர்த்துப் பிசையும் போதே வேறொன்றைக் கொட்டினான். அப்போது தான் முதலில் ஊற்றியது சாம்பாரல்ல, பருப்பு என்று ஊகித்தோம். பின்னது சாம்பாராம்! அவன் அந்த வகைப் பிரகாரம் ரசம், மோர் என்று கொண்டு வந்தான். ஆனால் எதுவுமே

உள்ளே செல்ல மறுத்தது. அதிலே நான் சுவைத்துச் சாப்பிட்டது 'மோர்' ஒன்றே தான்!

உடல் நலப் பத்திரத்தில் கையெ ழுத்திடும் வேலையைப் புகை வண்டி நிலையத்தில் வைத்துக் கொள்வதாக வைத்திய அதிகாரி கூறியதால் நிலை யத்திலுள்ள வைத்திய அதிகாரியின் அத்தாட்சி பெற்றோம். இரண்டு மணிக்கு வண்டி வந்தும் அதில் வந்த பிரயாணிகளைப் பார்த்து அனு மதிக்க மணி மூன்றரையாகி விட் டது! அதன் பின் வண்டி புறப்பட் டது. ஏதோ சிறையிலிருந்து விடு தலை பெற்றதைப்போன்ற உணர்ச்சி உள்ளத்தே எழுந்தது!

வண்டி பாம்பன் கால்வாயை அடைந்தது. பாம்பன் கால்வாய் ஆழத்திலே குறைவாக இருந்தா லும் சுமார் ஒரு மைல் அகலத்தை உடையது. இராமேஸ்வரம் தனுஷ் கோடி இருக்கும் பிரதேசத்தைப் பிரிக்கும் அக்கால்வாயின் மேல் பாலத்தைக் கட்டி, தீவு என்னும் பெயரை மேற்படி பிரதேசம் அடைய முடியாதபடி செய்திருக் கின்றனர். இயற்கையின் அமைப்பை மனிதன் தனக்குச் சாதகமாக மாற் றிக்கொள்ளலாம் என்பதற்கு இது ஒரு சான்று.

பாலத்தின் அமைப்பு மிக அழ கானது. மத்திய பாகத்தில் சிறு கப்பல்கள் செல்லும்போது பாதை விடவும், புகை வண்டி செல்லும் போது பாதையை இணைக்கவும் தகுந்தபடி இரண்டு தூக்கும் இணைப் புகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. வண்டி பாலத்தின் மீது செல்லும் போது மனோரம்மியமாக இருந்தது.

இருபுறமும் கடல்! ஆர்ப்பரிக்கும் கடலல்ல! அமைதியான கடல். அதிலே வயிற்றுப் பாட்டைக் கவ னிக்க மீன் பிடிக்கும் வலைஞர்கள், சிறு சிறு படகுகளிலே பரந்த கட லிலே அந்தச் சிறு படகும் ஆட்க ளும் பார்ப்பதற்குக் கவர்ச்சிகரமாக இருந்தன. ஆனால் அவர்கள் நிலை?

வாழ்க்கை ஒரு அலைகடல். அக் கடலிலே பொறாமை, சூது, வஞ் சனை என்ற சுறா மீன்கள், பாறை கள், திமிங்கிலங்கள் நிறைய உண்டு. மனிதன் தன் வாழ் நாட்களை அக் கடலிலே இனிமையாகக் கழிக்க வேண்டுமானால் இந்தக் கொடிய பிராணிகளின் கோரப் பிடியிலே சிக்காமல் செல்லவேண்டும். அதற்கு ஒரு படகும் அதை நல்ல வழியிலே செலுத்தத் திறமையும் வேண்டும். படகை அமைப்பதற்குப் பொருளா தாரம் என்ற மரமும், ஒழுக்கம், அன்பு, நேர்மை என்ற இரும்புச் சாமான்களும் தேவை. ஆனால் நாம் இன்று காண்பவை என்ன? ஓட் டைப் படகுகள்! மரம் நன்றாக இருந்தால் அதை இணைக்கும் இரும்புச் சாமான்கள் இற்றுப் போயிருக்கின்றன. இரும்புச் சாமான்கள் நன்றாக இருந்தால் மரம் சிதைந்திருக்கிறது! படகிலி ருந்தவர்கள் வாழ்க்கைக் கடலில் தத்தளிப்பவர்கள். அவர்கள் காலம் முழுவதும் அந்த நிலைதானா? கையி லிருந்த ஒளிப் பதிவுக் கருவியை என்னை அறியாமலே என் கைகள் இயக்கின.

பாலமும்கடந்தது. மனதிலிருந்த பாரமும் தணிந்தது. மீண்டும் பிர யாண நினைவு தலை தூக்கிற்று.

சுமார் 5 மணிக்கு வண்டி தனுஷ் கோடி போய்ச்சேர்ந்தது. பிரயாணிகள் வண்டியை விட்டு இறங்கி ஒருவரை யொருவர் முந்திக் கொண்டு சுங்கச் சாவடியை நோக்கி விரைந்தனர். சீக்கிரமாகச் சோதனை முடித்துக் கப்பலில் இடம்பிடிக்க முந்திக் கொள்ளவே அந்த ஓட்டம்! நாங்கள் சாவதானமாகச் சாமான்களை இறக்கித் தூக்கிக்கொண்டு சாவடியை அடைந்தோம். சாவடியிலிருந்த சுங்க அதிகாரிகள் எங்கள் உடையைக் கவனித்ததும் எங்களிடம் வந்தார்கள். "நீங்களெல்லாம் சாரணர்கள். எனவே உங்களிடம் தடுக்கப்பட்ட பொருள்கள் எதுவுமிருக்காது என்று நம்புகிறோம். எங்கள் நம்பிக்கை உண்மையானது என்றால், உறுதி கூறினால் நீங்கள் போகலாம்" என்றார்கள். நாங்கள் உறுதிப் படுத்தியதும் எங்களைப் போக அனுமதித்து விட்டனர். சாரணர்கள் என்றால் மேல் நாட்டில் எவ்வளவு மதிப்புக் கொடுக்கிறார்கள் என்பதை நமது துணைச் சாரண ஆணையாளர் (Asst. Dt. Commissioner) திரு. J. D. ஆசீர்வாதம் அவர்கள் எத்தனையோ தடவைகள் அழகாக எடுத்துரைத்திருக்கின்றனர். அந்த நிலை நம் நாட்டிலும் விரைவில் ஏற்படும் என்ற நம்பிக்கை எங்கள் இலங்கைப் பயணத்தில் எங்களுக்குக் கிடைத்த மதிப்பிலிருந்து பிறந்தது.

கப்பலை நோக்கி நடந்தோம். கப்பலின் பெயர் "இர்வின்". கப்பலை ஒளிப் பதிவு செய்து கொண்டேன். கப்பலைப் பார்த்தபடியே படியில் காலை வைத்தேன்.

"சார்! பாஸ் போர்ட் பிளீஸ்!" என்ற குரல் கேட்டு நின்றேன். கப்பலில்ஏற்றும் போது அனுமதிச் சீட்டைப் பார்வையிட்டுத்தான் அனுப்புவார்களாம்!

கப்பலில் இரண்டு வகுப்புகள். இரண்டாம் வகுப்புப் பிரயாணிகள் கப்பலின் கீழ் தட்டிலும், உயர்ந்த வகுப்புப் பிரயாணிகள் (அதாவது முதல் வகுப்பு) மேல் தட்டிலும் அனுமதிக்கப் பட்டனர். இரண்டு தட்டுகளிலும் நீளமான மரச் சாய்மானப் பெஞ்சுகள் போடப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு தட்டிலும் வேண்டிய வசதிகள் யாவும் இருக்கின்றன. உணவு விடுதி கூட இருக்கிறது. அந்த விடுதியில் ரொட்டி, வெண்ணெய், வருவல், காபி,தேயிலை நீர் முதலியவை விற்கப்படுகின்றன. விலைகள் அதிகமே என்றாலும் சாதாரணமாக காபி, தேயிலை நீர் ஒரு கப் நாலு பேர் சாப்பிடக்கூடிய அளவு நிறையக் கொடுக்கிறார்கள்.

"அதிகமாக வயிற்றை நிரப்பிக் கொள்ளாதீர்கள்! கப்பலின் ஆட்டத்திலே வாந்தி வரும்," என்று யுத்தக் கப்பல்களில் சென்ற தன் அனுபவத்தைக் கொண்டு எச்சரித்திருந்தார் நண்பர் "வில்லன்" தேவதாஸ். ஆனால் அவர் எச்சரிக்கை பயனற்றுப் போய் விட்டது. கப்பல் ஆடவுமில்லை, அலை மோதவுமில்லை. அமைதியாகச் சென்றது.

கப்பல் புறப்பட மணி 6-30 ஆகி விட்டது. நம் நாட்டின் எல்லையை நீங்கும் போது கொஞ்சம் கலக்கமாகவே இருந்தது. கப்பல் செல்லச் செல்ல கரை மறைந்து கொண்டே வந்தது. அது தானாக மறையு முன்பே இரவு முந்திக்கொண்டு மறைத்து விட்டது.

எங்கும் இருள்! கப்பல் கடலைக் கிழித்துச் செல்லும் சத்தத்தைத் தவிர எங்கும் அமைதியே நிலவியது. கப்பலில் இருந்தவர்கள் பேச்சுக் கூட அமைதியைக் குலைக்கவில்லை! அமைதியான சூழ் நிலையிலே, அதிலும் இரவிலே, ஆனந்தமாகத் தூக்கம் வருவது இயல்பு தானே? தூங்கி விட்டேன். ஆனால் அத்தூக்கம் நெடு நேரம் நிலைக்க முடியாதபடி என் பக்கத்தே ஒரே கூச்சல் கிளம்பியது. திடுக்கிட்டு விழித்தேன். கூச்சலல்ல, ஒரு உரையாடலின உச்ச நிலை அது என்று தெரிந்தது!

உரையாடலின் முடிவிலே ஏற்பட்ட நகைச் சுவையால் கப்பலே அதிரும்படி கூடியிருந்தோர் சிரித்தனர். கப்பலும் சிரித்தது! ஆச்சரியத்தோடு பார்த்தேன். தலைமன்னார் நெருங்கி விட்டதைத் தெரிவிக்கக் கப்பல் ஓலமிட்டது என்று தெரிந்தது.

துறைமுகத்தை நெருங்க நெருங்கப் பிரயாணிகள் தங்கள் சாமான் சகிதம் வரிசையாக நிற்கத் தொடங்கினர். இறங்குவதற்குக்கூட வரிசை வேண்டுமா என்ற நினைப்பில் நாங்கள் சாமான்களுடன் படியை நோக்கி விரைந்தோம். "சார்! இங்கு இலங்கை சர்க்காரின் சோதனை நடக்கும். தடுக்கப்பட்ட பொருள்கள் எதையும் நீங்கள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட மாட்டீர்கள். நீங்கள் பூர்த்தி செய்து கொடுத்தீர்களே கொண்டு போகும் சாமான்களுக்கு ஒரு நிரல் (List) அதை வைத்துக்கொண்டு சோதிப்பார்கள். அதன் பின் உங்கள் பாஸ்போர்ட்டைப் பதிவு செய்து கொண்டு உங்களை அனுப்புவார்கள். இன்னும் குறைந்தது ஒரு மணி நேரமாவது ஆகும், நீங்கள் கப்பலை விட்டிறங்க!" என்றார் ஒருவர்.

எத்தனை இடத்தில் தான் இந்தப் பாஸ்போர்ட்டைப் பதிவார்கள்! கப்பலில் ஏறியவுடன் ஒரு தரம்! இறங்கும் போது ஒரு தரம்! திரும்பவும் கப்பல் ஏறும்போது ஒரு தரம்!

"அதுவும் அப்படியா?" என்று சோர்ந்து உட்கார்ந்தோம். சோதனை அலுவலர்கள் வந்தனர். அவர்கள் ஒவ்வொருத்தர் ஒவ்வொருவர் சாமான்களை ஆராய்ந்தனர்.

"நீங்களெல்லாம் சாரணர்களா?"

"ஆமாம்!"

"சரி! எல்லோரும் இப்படி வரிசையாக நில்லுங்கள். இப்போது உங்களை எல்லாம் தனித்தனியே சோதிக்க விரும்பவில்லை. உங்களுடைய வாக்கிலே நம்பிக்கை வைத்து உங்களை அனுப்புகிறோம். ஏதாவது நீங்கள் வைத்திருந்தால் கூறிவிடுங்கள்!" என்றார் ஒருவர்.

"எங்களை நீங்கள் நம்பலாம். எங்களிடம் தடுக்கப்பட்ட பொருட்கள் எதுவுமில்லை" என்றார் தலைவர் திரு. சந்திரா. "அப்படியானால் நீங்கள் போகலாம்" என்று கூறிச் சோதித்து விட்டதற்கு எங்கள் சாமான்களில் அடையாளமிட்டனர். எங்களுடைய பாஸ்போர்ட்களை அனைத்தையும் மொத்தமாகக் கொண்டுபோய் ஒரு சோதனை அதிகாரியிடம் கொடுத்துச் சீக்கிரம் விசாரித்துப் பாஸ்போர்ட் பதிவு

செய்பவருக்கு அனுப்பும்படி கூறினார் ஒருவர்.

சீக்கிரம் போய் விடலாம் என்ற எங்கள் நினைப்பைத் தகர்த்தார், அந்த விசாரணை அலுவலர். அவருக்கு எங்கள் மீதோ, அந்தச் சோதனை அலுவலர் மீதோ அல்லது சாரணர் என்ற காரணத்தாலோ ஒரு வெறுப்புத் தட்டி விட்டது போலும்! சுமார் அரை மணி நேரம் கழித்துத்தான் எங்களை விசாரித்து அனுப்பினார். பின்பு அதைப் பதிவு செய்பவரிடம் பதிவு செய்து கொண்டு கப்பலை விட்டு இறங்கினோம்.

ஏதோ நெடுநாள் சிறையிலிருந்து விடுதலை பெற்றதைப் போல ஆனந்தத்தோடு புகை வண்டியை நோக்கி ஓடினோம். புகை வண்டி டிக்கட்டுக்காக மதுரையிலிருந்தே கடிதம் எழுதியிருந்தோம். "இரண்டாம் வகுப்பில் இடமில்லை. மூன்றும் வகுப்பு டிக்கட் வேண்டுமானால் உங்களுக்காகத் தருகிறோம்" என்று நிலைய அதிகாரி டிக்கட் வழங்கினார். மூன்றும் வகுப்பு என்று போட்டிருந்த வண்டியைப் பார்த்ததும் எங்களுக்கே சந்தேகமாகப் போய் விட்டது. ஏனெனில் அதனுடைய அமைப்பும், கவர்ச்சியும் முதல் வகுப்பு என்று சொல்லும்படி இருந்தது! பெஞ்சுகளிலே மெத்தையும், வண்டியின் உட்புறம் பளிங்குக் கல்போல் 'மாஸனைட்' பலகை அடிக்கப்பட்டும், உயரேசுழலும் விசிறிகளும் கவர்ச்சியைக் கொடுத்தன. ஒவ்வொருவரும் சௌகரியம்போல் படுக்கையை விரித்துச் சாய்ந்தோம்.

"சார்! நீங்கள் இந்திய நோட்டுகளை இங்கேயே மாற்றிக் கொள்ள வேண்டும். கையில் கொண்டு போவது சட்ட விரோதம்," என்றார் ஒரு போலீஸ்காரர். பசி வயிற்றைப் பிடுங்கியது. பணத்தை மாற்றிக் கொண்டு விடுதியில் சாப்பிட்டு வரலாம் என்று சென்றோம். பணத்தை மாற்றினோமே தவிர பசிக்கு நாங்கள் எதிர்பார்த்தது கிடைக்கவில்லை. அங்கே இருந்தது மது விடுதி(Bar)தான். சரி, நமக்கு வேண்டியது ஏதாவது கிடைக்குமா என்று பார்ப்போம் என்ற எண்ணத்துடன் உள்ளே நுழைந்தோம். அங்கு ஏற்கனவே கூட்டம் அதிகமிருந்தது.

"சரி! வாங்க! ஏதாவது பசியைத் தணிக்க ரொட்டி, பிஸ்கோத் கிடைக்குமான்னு கேட்போம்" என்றார் ஒருவர். அவை தான் கிடைத்தன. வாங்கி உள்ளே தள்ளி விட்டுச் சோர்வோடு வந்து படுத்தோம். வெகு நேரமாகியும் வண்டி புறப்படவில்லை என்றதும் பக்கத்திலிருந்த ஒருவரை வினவினோம்.

"கப்பலில் வந்திருப்பவர்கள் யாவரையும் சோதித்து முடிந்தபின் தான் அநேகமாக வண்டி புறப்படும். குறைந்தது இன்னும் ஒரு மணி நேரம் ஆகும்!" என்றார். அப்போது மணி பத்து!

"ஆமா! நீங்களெல்லாம் இப்படிச் சாவதானமாகப்படுத்திருக்கீங்களே. கப்பலில் வந்திருக்கும் எல்லா கீழ் வகுப்புப் பிரயாணிகளும் இருக்கும் இந்த இரண்டு மூன்றும் வகுப்பு வண்டிகளில் தான் பிரயாணப்பட வேண்டும். நீங்கள் உட்காரவே இடம் கிடைக்குமோ என்னவோ?" என்றார் நகைத்து.

"என்ன, அத்தனை பேருமா?" என்று ஒரே சமயத்தில் நாங்கள் கேட்டோம்.

"ஆமாம், சுமார் 500 பேர்!"

"ஐயோ!"

நேரம் செல்லச் செல்ல கொஞ்சங் கொஞ்சமாக ஆட்கள் வண்டியில் வந்து ஏறினர். நாங்கள் 'யாரும் இடம் கேட்டால் கொடுப்போம் அல்லது பேசாது படுத்திருப்போம்' என்ற முடிவோடு இருந்தோம். ஆனால் வண்டி புறப்படும் போது அப்படி ஒன்றும் கூட்டம் வரவே இல்லை. பக்கத்திருந்தவரை நோக்கினேம்.

"என்னமோ வெகு நேரமாகி விட்டதால் கூலி (!) களையெல்லாம் அடுத்த வண்டிக்கு அனுப்பலாம் என்று இந்த வண்டியை அனுப்பி விட்டனர்," என்றார்.

"அவர்கள் நீடு வாழட்டும்!" என்று வாழ்த்திச் சாய்ந்தோம். தூக்கம் என்னை அணைத்துக்கொண்டது. ஆனால் அந்தத் தூக்கமும் அதிக நேரம் நீடிக்கவில்லை. தூக்கத்திலும் இடையே விழிப்பு ஏற்பட்டது.

"சார்! வர்றேளா? அநுராதபுரம் வந்து விட்டது. போய்ப் பார்த்து விட்டுத் திரும்பி விடலாம்" என்று எழுப்பினர் கூட வந்தவர்.

"நாங்கள் கொழும்புக்கல்லவா போகவேண்டும்!" என்றேன்.

"இங்கு வண்டி வெகுநேரம் நிற்கும். நாம் உடனே 'டேக்ஸி'யில் போய்த் திரும்பி விடலாம்!" என்றார் அவர். சரி என்று புறப்பட்டோம்.

(தொடரும்)

## "சாரணர்" விளம்பர விகிதம்.

| | முழுப்பக்கம். 1 முறை | முழுப்பக்கம். 12 முறை | அரைப்பக்கம். 1 முறை | அரைப்பக்கம். 12 முறை |
|---|---|---|---|---|
| அட்டை 4-ம் பக்கம் | ரூ. 50. | ரூ. 500. | ரூ. 30. | ரூ. 300. |
| 2, 3-ம் பக்கம் | ரூ. 30. | ரூ. 300. | ரூ. 20. | ரூ. 180. |
| உள் பக்கம் | ரூ. 20 | ரூ. 200. | ரூ. 12. | ரூ. 100. |
| கால்பக்கம் | ரூ. $7\frac{1}{2}$ | ரூ. 60. | | |

சிறு விளம்பரங்களுக்கு ஒருபத்தி அங்குலம் 1-க்கு ரூ. 2.

A155/39
210616.

# சாரணீய விளையாட்டுகள்.

ரா. சுந்தரம், டால்மியாபுரம்.

9. குருடன் மிருகக்காட்சிசாலை: கண்ணைக் கட்டி ஒருவனை வட்டத்தில் நடுவில் நிறுத்தவேண்டும். அவன் யாரையாவது தொடுவான். தொடப்பட்டவன் ஏதேனும் ஒரு மிருகத்தின் ஒலியைச் செய்ய வேண்டும். அவன், தொடப்பட்டவனை குரலிலிருந்து யூகித்துச் சொல்லவேண்டும். தொடப்பட்டவன் பிறகு கண்ணைக் கட்டிக் கொள்ளவேண்டும். தொடர்ந்து இதேமாதிரி விளையாடலாம்.

10. கேள்விப்பந்துவிளையாட்டு: (Scout Question Ball) சாரணர்களை இரண்டு கட்சிகளாகப்பிரிக்க வேண்டும். ஒருகட்சி வட்டமாக நிற்கவேண்டும். மறுகட்சியில் ஒருவன் வட்டத்தின் மத்தியில் இருக்கவேண்டும். சாரண விஷயங்களான, முதல் உதவி, மதிப்பிடுதல், சமிக்ஞை, முடிகள், வழிக்குறிகள் போன்றவற்றில் ஒருகேள்வியை யாரையாவது ஒருவரைக் குறிப்பிட்டுக் கேட்கவேண்டும். அந்தக் கேள்விக்குப்பதில் சொல்லாவிட்டால் அவன் out ஆகிவிட வேண்டும். பிறகு மற்றொருவனைக் கேள்வி கேட்பான். வட்டத்தின் மத்தியிலிருப்பவன் மூன்று கேள்விகள் கேட்கலாம். அவன் கட்சியில் அடுத்தவன் மாறிவருவான். வட்டத்திலிருக்கும் கட்சியில் எல்லோரும்outஆனவுடன் ஆட்டம்முடியும்

11. இயற்கைவிளையாட்டு: படைகளிலுள்ள சாரணர்களை அணியாகப் பிரித்துவிடவேண்டும். குறிப்பிட்ட நேரத்திற்குள்வேம்பு, ஆல், மா, அரசு, பலா, பூவரசு போன்ற இலைகளைக் கொண்டுவர வேண்டும். சாரணர்கள் நடந்தோ, ஓடியோ, சைக்கிளிலோ எப்படி வேண்டுமானாலும் செல்லலாம்.

12. தப்படிகள்: சிறுவர்கள் சௌகரியம்போல் மைதானத்தில் பரவிநிற்கவேண்டும். கண்ணைக் கட்டிக்கொண்டு ஒருவன் இருக்க வேண்டும். அவன் எவனைத்தொடுகிறானோ அவன் மறுபடி கண்ணைக் கட்டிக்கொள்ளவேண்டும். நான்கு புறமும் ஒரு தப்படிக்குமேல் நகரக்கூடாது. மூன்று தடவைகள் தான் நகரலாம். முதல் அடி எடுத்துவைத்ததும் இடது கையை இடுப்பில்வைத்துக்கொள்ளவேண்டும். இரண்டாவதுஅடிவைத்ததும் வலதுகையை இடுப்பில் வைத்துக் கொள்ளவேண்டும். மூன்ருவது அடிவைத்ததும் இரண்டு கைகளையும் கட்டிக்கொள்ளவேண்டும்.

13. சேவல்சண்டை: இரண்டு சாரணர்கள் விளையாடக்கூடியது. 4 அடி விட்டமுள்ள ஒரு வட்டத்தை வரைந்துகொள்ள வேண்டும். கைகளை பின்னல் கட்டிக்கொள்ள வேண்டும். ஊதல் ஊதியவுடன் புஜத்தினல் தள்ளி வெளியேற்ற வேண்டும்.

14. கரையின்மேல்; நீரினுள்: (In the pond; on the bank) ஒரு பெரிய வட்டம், சிறிய வட்டம் வரைந்துகொள்ளவேண்டும். பெரி

யவட்டத்தைக் கரையென்றும்சிறி யவட்டத்தை நீரென்றும் குறிப் பிடவேண்டும். அடிக்கடி கட்ட ளைகளைக் 'கரைமேல்' 'குளத்தில்' என்று மாறி மாறிச் சொல்ல பையன்கள் அந்தந்தவட்டத்திற்கு தாவவேண்டும். தவறியவர்களையும் மாறுகச் செய்பவர்களையும் மத்தி யில் உட்கார வைக்கவேண்டும். கடைசியில் எஞ்சியுள்ளவன் ஜயித்தவன்.

15. தலைவனைக்கண்டுபிடி: சாரணர்களை வட்டமாக உட்கார வைத்துவிட்டு ஒருவனை வெளியில் மறைவான இடத்திற்கு அனுப்பி விட்டு, உட்கார்ந்து இருப்பவர்க ளில் ஒருவனைத் தலைவன் என்று குறிப்பிடவேண்டும். மற்ற சார ணர்கள் தலைவன் செய்யும் காரி யங்களைச்செய்யவேண்டும். ஊதல் ஊதியவுடன் வெளியே அனுப்பிய வன் வந்து தலைவனைக் கண்டுபிடிக் கவேண்டும். மூன்று தடவைகள் தவறலாம். தலைவன் கண்டுபிடிக் கப்பட்டால் வெளியே அனுப்பப் படுவான். அவன் மறுபடியும் ஊதல் ஊதியவுடன் வந்து தலைவ னைக் கண்டுபிடிக்கவேண்டும்.

(தொடரும்.)

# சாரணீய வேலைகள்.

L. அஸ்வத்தநாராயணன், மழவராயநல்லூர். (தெ. ஆ)

அன்புமிக்க தோழர்களே,

இப் பத்திரிகையின் வாயிலாக சாரணர்களாகிய உங்கள் அனைவர் களுக்கும் ஒரு முக்கியமான விஷயத் தைப்பற்றி எழுத சமயம் வாய்த் தது பற்றி மகிழ்ச்சி எய்துகிறேன்.

ஒவ்வொரு பாடசாலையிலும், சுற்றுப்புறங்களிலும் சாரணர் பயிற்சிபெற ஒவ்வொரு நண்பரை யும் ஊக்குவிக்கவேண்டியது நமது முதற்கடமை. இவ்இயக்கத்திலிருந்து நம் நாட்டு மக்களுக்கு பல விதங் களிலும் பலனளிக்கும் முறையில் சேவைகளைச் செய்யக் கடமைப்பட் டுள்ளோமல்லவா? இதில் பெண் சாரணர்களும் பெரும் பங்கெடுத் துக்கொண்டு இம் முயற்சிகளிலே ஈடுபடுவார்களென்று எதிர்பார்க் கிறேன்.

கிராமம்தான் நாட்டு முன்னேற் றத்திற்கு அடிகோலும் கருவி. முக்கியமாக நாம் கிராமத்தை சீர் திருத்தவேண்டியது நமது கடமை யல்லவா! ஓய்வு நேரங்களிலே சாரணர்களாகிய நீங்கள் தமது சுற் றுப்புறங்களிலுள்ள கிராமங்களுக் குச்சென்று கீழ்கண்ட வகைகளிலே மக்களுக்கு உதவி புரிந்து சர்க்கார் வகுத்துள்ள ஐந்துவருடத் திட்டத் திற்கு அனுகூலம் செய்யலாமென் பது என் கருத்து.

முதியோர் கல்வி.

ஒவ்வொரு கிராம வாசியும் ஓட்

டுரிமையை தகுந்த முறையில் அளிக்க கல்வி அவசியம். முதியோர்களுக்கும் மற்றும் கல்விவசதியற்றவர்களுக்கும் ஓய்வு நேரங்களிலே சென்று பாட்டுக்கள், பஜனைகள், நாடகங்கள், செய்தியறிவித்தல், படங்களைக்கொண்டு விளக்குதல் இவைகள் மூலம் அரிய விஷயங்களை எடுத்துரைத்து கல்வியின் பயனை விரைவில் அடையச் செய்யலாம்.

### கிராம சுகாதாரம்.

கிராமங்களிலே பொதுவாக கண்ட விடங்களில் மாடுகளைக் கட்டியும், மலஜலம் கழித்தும், அசுத்தத் தண்ணீரைக் குடித்தும் பலவித வியாதிகளுக்கு ஆளாகுவது சர்வ சாதாரண விஷயமாக இருக்கிறது. இக்குறைக்கு மக்கள் சுகாதாரபழக்க வழக்கங்களை யறியாததே காரணம். இதைகிராமங்களுக்கு நாம் சென்று சுகாதார பாடல்களால் மக்களைக் கவர்ந்து, கூட்டம் கூட்டி சொற்பொழிவு மூலமும் மற்றும் காட்சிப் படங்கள் மூலமும் சுகாதாரநற் பழக்க வழக்கங்களையும், அவற்றின் நன்மைகளையும் விளக்கி கிராம மக்களை நற்பயன் அடையச் செய்யலாம் "வியாதிகள் வந்தபின் காப்பதைவிட, வருமுன்காப்பதுநன்றன்றோ!"

### பெண் கல்வி.

முக்கியமாக நகரத்திலுள்ளவர்கள ஓரளவு கல்வியின் பயனை அடைகிறார்களே தவிர, குறிப்பாககிராமப் பெண்கள் கல்வியிலே பிற்போக்குடையவர்களாவே இருக்கிறார்கள். நாட்டின் தவப் புதல்வர்களையும், புதல்விகளையும் ஈன்றளிக்கும் அறிவுச்சுடர்கள் குன்றியிருப்பது நம் சுதந்தர நாட்டில் ஒரு பெருங்குறையன்றோ! வருங்காலச் செல்வக் குழந்தைகள் ஐந்தாண்டு அடைந்து அறிவுச்சாலைக்குச் செல்லுமுன் அழகிய முறையிலே ஆற்றல் மிக்க காரியங்களை அள்ளி ஊட்டும் அப்பெண் முன்னேறவேண்டியது முற்றிலும் முக்கிய மல்லவா!

சாரணப் பெண்களே! இனி நிமிடமும் காத்திராமல் தொடங்குங்கள் உங்கள் சேவையை. செல்லுங்கள் வீரமுடன் கிராமங்களுக்கு. உங்கள் கடமையை உங்களாலியன்றளவு செய்யுங்கள். பெண்கள் கல்வி பற்றி பிரசாரம் செய்யுங்கள். ஒவ்வொரு நாளும் நீங்கள் செய்த எவ்வித உதவியையும் சீர்தூக்கிப் பாருங்கள். அப்பொழுது நம் சாரணர் இயக்கமானது நம் தாய் நாட்டிலே செழித்தோங்குமென்பது திண்ணம்

---


## புதிய தயாரிப்பு.

## பாரத் சாரணர் கொடி

(புதிய ட்ரேபாயில் சின்னத்துடன் கூடியது.)

| | | | |
|---|---|---|---|
| சிறியது (படைகளுக்கு) | $3 \times 4\frac{1}{2}$ அடி | ரூ. | 7—8—0 |
| பெரியது (சங்கங்களுக்கு) | $4 \times 6$ அடி | ,, | 10—0—0 |
| விசில் சயிறு காக்கி .... | .... | ,, | 0—4—0 |

விபரங்களுக்கு: தபால் செலவு தனி

பாரத் சாரணர் சங்கம், 41, வடக்காவணிமூல வீதி, மதுரை.

# திரிசாரணர் பயிற்சிக் குறிப்புகள்.

R. சுந்தரம், வித்வான் M. S. பஞ்சகேசன், டால்மியாபுரம்.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

4. திரிசாரணனும், இயக்கமும்:

திரிசாரணர்கள் சாரணீயத்தால் பெறும் உயர்ந்த பண்பாடு தொண்டு செய்யும் மனப்பான்மையாகும். அத்தொண்டும் (1) இயக்கம் சார்ந்த தொண்டு (2) பொதுநலத் தொண்டு என இருவகைப்படும். திரிசாரணர்கள் தம் குழுவில் (R. M) அணித் தோழனாகவும், (S. R. M.) தலைமை அணித்தோழனாகவும் இருந்து செயலாற்றுவது மட்டுமன்றி, மற்றைத் தொகுதிகளிலுள்ள சாரணர், இளஞ் சாரணர் பிரிவுகளை நடத்துவதில் உதவி புரியலாம். விளையாட்டுக்கள் நடத்துபவராகவும், கைத்தொழில் கற்றுக் கொடுப்பவர்களாகவும், தேர்ச்சிச்சின்னச் சோதனையாளராகவும், போதனையாளர்களாகவும், முகாம் உதவிகளாகவும் இருந்து பல பணிகளைப் புரியலாம். ஆலோசனைக்குழு, தொகுதிக் குழு முதலியவற்றில் அங்கம் வகிக்கலாம். சாரண இயக்கத்தைப் பற்றிப் பிரசாரம் செய்தல், புத்தகங்கள், பத்திரிக்கைகள், துண்டுப் பிரசுரங்கள் ஆகியவற்றை வெளியிடுதல் முதலான செயல்களில் முன்வந்து ஒத்துழைக்கலாம். வியாதியினாலோ, அன்றி வேறு வகையினாலோ படைக் கூட்டங்களுக்கு வர இயலாதவர்களுடைய இருப்பிடங்களுக்குச் சென்று, கண்டு பேசி, உவகையூட்டி ஊக்கமளிக்கலாம். இயக்கப் பெருங் கூட்டங்கள், விளையாட்டு விழாக்கள், போட்டிப் பந்தயங்கள், பெரும் விழாக்கள் முதலியவை ஒழுங்குடன் நடைபெற உதவி புரியலாம். இயக்கத்தின் வளர்ச்சியின் பொருட்டு இயன்றவரை உறுப்பினர்களைச் சேர்த்து வருவாய்க்கு வழிதேடலாம்.

5. திரிசாரணனும், அவன் வாழும் நாடும்:

திரிசாரணர்கள் தாய்நாட்டின் சேவையின் பொருட்டுத் தங்கள் உடலை வலிவும், வனப்பும் உள்ளதாக வைத்துக்கொள்ளவேண்டும். வருங்கால உலகம் உணரும் வகையில் நல்ல பண்பாட்டின் உறைவிடமாக இருக்கவேண்டும். பொதுநல இயக்கங்களில் தன்னால் இயன்றவரை ஈடுபட்டு உழைக்கவேண்டும். நாட்டின் நற்குடி மக்கள் பிறரின்

சொந்தக் காரியங்களில் ஈடுபடு தல்பிழையானதாகும். விதிகளை யும் கோட்பாடுகளையும் மீறக் கூடாது. அரசியல் கலைகளின் அடிப்படைக் கருத்துக்களை அறி தல் வேண்டும். ஸ்தல சுய ஆட்சி ஸ்தாபனங்களில் நடைமுறை யில் பயிலல் வேண்டும். அரசியல் சட்டம், ஜீவாதார உரிமைகள், கடமைகள், கல்வி, சுகாதாரம், ஓட்டுரிமை, அதை உபயோகிக் கும் முறை, தொழிலாளி, முத லாளி இவர்களுக்கிடையே நிலவ வேண்டிய உறவு முதலிய விஷ யங்களில் தேர்ச்சிபெறுதல் வேண்டும். சமூகத் துரோக மானதும், குடியரசுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடியதுமான நாச வேலையில் தான் ஈடுபடாததோடு, பிறரும் ஈடுபடாதவாறு கண் காணிக்க வேண்டும். தன்னு டைய சொந்த நலன் நாட்டின் நலத்தோடு பிணைந்திருக்கிறது என்ற உண்மையை உணர்ந்து நடக்கவேண்டும். திரிசாரணர் கள் உலகில் தம் நாட்டிற்குரிய அந்தஸ்தை அறிதல் வேண்டும். ராஜ்யங்களின் ஆட்சிமுறை, குடியரசின் ஆட்சிமுறை, ஐக் கியநாடுகளின் ஸ்தாபனம், அதன் கிளை உறுப்புகள் ஆகிய வை பற்றியும் பொதுவாக அறிந் திருத்தல் வேண்டும். நாட்டின் பெருமை தனிப்பட்ட நபரின் குணம், செயல், தகுதி இவற் றைப் பொறுத்திருக்கிறது என் பதை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

## 6. திரிசாரணனும், இறைவனும் :

எல்லாச் சமயங்களும் இவ் வுலகைப் படைத்த இறைவன் ஒருவன் உளன் என்பதை ஏற் றுக்கொள்ளுகின்றன. வள்ளு வரும் இவ்வுலகம் "ஆதிபகவனை முதலாக உடையது" என்று கூறினார். சமய உணர்வின்றி மக்கள் வாழ்க்கையில் சித்தியடை தல் அரிது. முழு வல்லமையுள்ள முதற் பொருள் உண்டு என்று உணர்ந்து, அவர் அளித்த உயிரை உற்ற முறையில் உப யோகப்படுத்தி, அவர் சேவை களில் ஈடுபடுவதே சிறந்த சமயம் என்று சொல்லப்படும். திரிசார ணர்கள் நாத்திகம் என்னும் நர கத்தில் நழுவி விழுதல் கூடாது; பர சமயத்தவர்களைப் பரிகசிக்கக் கூடாது. ஆலயம் சென்று ஆண்டவனை அடிபணிதல் மட்டு மன்றி இயற்கை எழிலும், எளிய விலங்குகளிடத்திலும், செடி கொடிகளிடத்திலும், ஓடும் ஓடையிலும், பாடும் பறவைகளி டத்திலும் ஆண்டவன் படைப் பின் அற்புதத்தை அறிந்து ஆனந்தித்தல் வேண்டும். காடு களையும், மலைகளையும், கழனி களையும் கண்டு களிப்படைதல் வேண்டும். தன்னையும் படைத்து தனக்கு இன்பமளிக்க இயற்கை யையும் படைத்த இறைவனிடத் தில் நன்றி மறவாத நாகரீகப் பண்புடன் இருத்தல் வேண்டும். உண்ணும் முன்னும், உறங்கும் முன்னும், ஆடும் பொழுதும், பாடும் பொழுதும் அவருக்கு

வணக்கம் செலுத்தல் வேண்டும். நல்லவனாய் இருப்பது சிறந்தது. நல்ல காரியங்களைச் செய்வது அதைவிடச் சிறந்தது. ஒவ்வொரு திரிசாரணனுக்கும் மதப் பற்று வேண்டும். ஆனால் ....! மத வெறி கூடாது. இதைத் திரிசாரணர்கள் தம் சிந்தையில் கொள்ளவேண்டும். கற்றதன் பயன் கடவுளைத் தொழுதலே என்று வரைந்தார் வள்ளுவர்.

7. மனிதத் தன்மை:– மனிதத் தன்மை காலமளித்த ஒரு நன் கொடை. அது ஆண்மையோடு கூடிய அடக்கத்தாலும், பொய் யற்ற வாழ்க்கைப் போராட்டத் தாலும் பூரண வளர்ச்சிபெற்று பொலிவுறும். சிறந்த சிந்தனையும், தூய பழக்கமும், அவற்றை உண்டாக்கும். மனிதத் தன்மை யின் மூன்று முக்கிய அம்சங்கள் (1) நல்லொழுக்கம் (2) பலம் (3) நெறியில் நின்று தவறாமை என்பனவாகும். திரிசாரணரை வரும் வாழ்க்கைத் தடைகளிலும், உள்ள உணர்ச்சிகளிலும் தங்கள் சித்தத்தைச் சிதறவிடாமல் மிக ஜாக்கிரதையாக இருக்கவேண் டும். நிலையற்ற மனம், நெறியல்லா நெறியில் நிதிதிரட்டல், குடி, புகையிலை முதலியன உபயோ கித்தல், சூதாட்டம் முதலியவற் றில் ஈடுபடுதல், பாலுணர்ச்சி கள், நாத்திகப் பெரும்பாறை, அதிக ஆசை, தன்னைத்தானே இகழ்தல் ஆகிய இவற்றை எதிர்த்து வெற்றிகொண்டு, ஒவ் வொரு திரிசாரணனும் சிறப் புடன் திகழல் வேண்டும். மனி தத்தன்மையின் உயிர்நாடி நட் பினைப் பெருக்கிக் கொள்ளுதல். “மருவுக மாசற்றார் கேண்மை” என்றார் வள்ளுவரும். திரி சாரணப் பயிற்சியென்பது மனி தன் தன்னைத்தானே சோதித்துக் கொள்ளும் சோதனை. இவ்வாறு சோதிக்கப்பட்ட திரிசாரணன் உண்மை மனிதனாக உலகில் நிலவுவான். திரிசாரணச் சின்ன மளிப்புச் சடங்கிற்குப் பிறகு திரி சாரணர்கள் சில திட்டமான பொறுப்புகளைக் கட்டுப்பாட்டுக் குட்பட்ட கடமைகளோடு ஒரு முட்டுப்பாடு மின்றி கட்டாயம் செய்யக் கட்டுப்பட்டவர்கள்.

(தொடரும்)

---

## “சாரணர் சந்தா”

அனுப்பும் விலாசம்:

கௌரவ காரியதரிசி,
மதுரை ஜில்லா பாரத் சாரணர் சங்கம்,
41, வடக்காவணி மூலவீதி, மதுரை.

# கண்ணன் சொல்லும் கதை (9)

ஆங்கிலமூலம் :
மேஜர். கே. ராகவாச்சாரி,
மதராஸ்.

தமிழாக்கம் :
" தொண்டன், "
மதுரை.

முடிச்சுகள்.

இனி முடிச்சுகள் மிக முக்கியமானவை. எப்படியோ சாரணீயத்திற்கும், முடிச்சுகளுக்கும் நெருங்கிய சம்பந்தம் இருப்பதாகத் தோன்றுகிறது. இது தவிர எனக்கே தினந்தோறும் எதையாவது கட்டவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. சில வேளைகளில் மனிதன் உயிர் பிழைத்துத் தப்புவதே முடிச்சுகளை ஒழுங்காய்க் கட்டுவதைப் பொறுத்திருக்கிறதென்று சொல்லுகிறார்கள். (Wolf Cubs Handbook) என்ற புத்தகத்திலிருந்து நயாகரா ஐஸ்விபத்துக் கதையை எங்கள் படைத்தலைவர் ஒருமுறை வாசித்துக்காட்டினர். ஆகவே முடிச்சுகளை நான் கற்றுகவேண்டும். முதலில் ரீப்காட் (Reef knot) என்ற படிமுடிச்சும், ஷீட் பெண்ட் (Sheet Bend) என்ற தூளி முடிச்சும் கற்றுக் கொடுத்தார்கள். இதற்கு முன் பல சந்தர்ப்பங்களில் முடிச்சுகளை நான் போட்டது உண்டு அப்படிப் போட்ட முடிச்சு இலேசில் அவிழ்க்க வராது. ஆனாலும் இந்த துஷ்ட முடிச்சு எப்படியோ தானுகவே அவிழ்ந்துகொள்ளும். அடுத்த நிமிஷம் என் புஸ்தகங்களும், மற்ற சாமான்களும் ரோட்டில் சிதறிக்கிடக்கும். அப்பொழுதெல்லாம் நான் சமர்த்தாய் இருக்கவில்லையே என்று நினைப்பதுண்டு. ஆகையால் தான் முடிகளைச் சரியாய்க் கட்டும்விதம் அறிந்துகொள்ள மிகவும் ஆவல் உண்டாயிற்று.

முதன் முதலில் ரீப் முடி போடத் தெரிந்துகொள்ளவேண்டும். இதற்கு இந்தப் பெயர்வந்த காரணம் தெரியவில்லை. இரண்டு கயிறுகளை ஒன்றுயிணைத்துக் கட்ட இம் முடி உதவுகிறது. இது கிரானிகாட் (Granny knot, முடியைப்போல் நழுவக்கூடியதல்ல. ஆனல் முடியின் இருபக்கமும் உள்ள கயிறுகளின் இழுவைப்பளு ஒன்றுக்கொன்று கூடக்குறைச்சலாயிருந்து, அதனுல் திடீரென்று கயிறு சுண்டி விடப்பட்டால், அப்பொழுது முடிச்சு அவிழ்ந்து விடக்கூடும். கொடி யொன்று காற்றில் பறந்து ஆடும்போது அதைச் சேர்த்துக் கட்டியுள்ள கயிற்றில் சில சமயம் இழுவை இருக்கும்; சில வேளை இராது. இதனுல் முடிச்சு அவிழ்ந்துவிட ஏதுவாகுமாகையால் தான் ரீப் முடியை கொடிக்குக் கட்ட உபயோகிப்பதில்லை. முடியின்

இரண்டு பக்கத்துக் கயிற்றிலும் ஒரே அளவு இழுவையிருக்கின்ற போதுதான் ரீப் முடி உபயோகமாகும். ஆகவே மூட்டை முடிச்சுகள் கட்டுவதற்கும், பாண்டேஜ் முடிப்பதற்கும், இது போன்ற மற்ற காரியங்களுக்கும் ரீப்முடி உபயோகமாகிறது.

ரீப் முடியை எப்படிப் போடுவது? வாய் வார்த்தையாய்ச் சொல்லுவதைக் காட்டிலும், எங்கள் படைத் தலைவர் போடுவதைப் பார்த்துக்கொண்டே போடுவது தான் சுலபமாயிருக்கிறது. இரண்டு கயிறுகளை கைக்கு ஒன்றாக எடுத்துக் கொண்டு, வலதுகைக் கயிற்றின் நுனியின் மேல், இடதுகைக் கயிற்றின் நுனியைவைத்து, முதல் கயிற்றால் இரண்டாவது கயிற்றைச் சுற்றியெடுக்கவேண்டும். பிறகு முதல் நுனியை இரண்டாவது நுனியின் மேல் வைத்து, முன் போலவே சுற்றியெடுத்தால் ரீப்முடி வந்துவிடும். இதற்குப் பதிலாக இரண்டாவது நுனியை முதல் நுனியால் சுற்றியெடுத்தால், அது அவிழ்க்க வராத ஒருவித முடியாக ஆகிவிடும். இதற்குத்தான் "கிரானி நட்' என்று பெயர்.

அடுத்தது ஷீட்பெண்ட் என்ற தூளிமுடி. மாலுமிகள் கயிறுகளைக் கட்டும் போது கயிற்றில் வளைவு எடுப்பதாகச் சொல்வார்கள். 'ஷீட்பெண்ட்' என்பது 'வளைவு' என்ற அர்த்தங் கொடுக்கும் பெயராயிருந்தாலும், அது ஒரு முடிச்சேயாகும். சம கனமில்லாத இரண்டு கயிறுகளைச் சேர்த்துக்கட்ட இது உதவும். கனத்த கயிற்றின் நுனியை மடித்து ஒரு வளைவு செய்து கொண்டு, லேசான கயிற்றின் நுனியை வளைவின் நடுவில் கீழிருந்து மேலே கொண்டுவந்து, பிறகு வளைவைப் பின்புறமாய் ஒரு சுற்றுச் சுற்றி, மறுபக்கத்தில் மேலே கொண்டுவந்து, ஏற்கனவே மேலே உள்ள லேசான கயிற்றுக்கு அடியில் விட்டுக் கெட்டியாக இழுத்தால் தூளி முடி ஆகும். சில சமயங்களில் கட்டவேண்டிய கயிறுகளில் ஒன்றின் நுனி ஏற்கனவே வட்ட வளையமாய்க் கட்டப்பட்டிருக்கலாம். அப்பொழுது வளையமுள்ள கயிற்றை கனத்ததாகப் பாவித்து முன் சொல்லிய படியே கட்டினால் ஷீட்பெண்ட் வரும்.

இந்த முடிச்சுகளை நான் தினசரி பழகிக்கொள்ளுவதால் கயிறுகளைப் பார்க்காமலேயே இருட்டிலும் போட முடிகிறது. முதுகின் பின்னால் கொண்டுபோய் இந்த முடிகளைப் போடத் தெரிய வேணுமென்று எங்கள் தலைவர் சொல்லுகிறார். (தொடரும்)

---

படைத் தலைவர்களுக்கு!

தங்கள் படைச் செய்தி 'சாரண'ரில் இடம் பெற்றிருக்கிறதா? இல்லையேல் ஆசிரியருக்கு எழுதுங்கள். அவசியம் போடுவார்.

# செய்திகள்.

மதுரை நகர் திரிசாரணர் படையின் வருஷாந்தர ஸ்போர்ட்ஸ் போட்டிகள் அக். 30உ துவங்கி, ஒரு வாரம் நடைபெற்றன. மொத்தம் இருபத்திரண்டு அயிட்டங்களில் நடந்த இப்போட்டிகளின் கடைசிப் பகுதி நவ. 7உ கோச்சடை நீர் நிலையத் தோட்டத்தில் ஒற்றை நாள் முகாமில் முடிவடைந்தது. ஸ்டேட் ஆர்கனைஸிங் கமிஷனர் உள்பட பல திர்ப்பாளர்களின் உதவியுடன் மதுரை ஸௌராஷ்ட்ர ஹைஸ்கூல் முதலிய நான்கு இடங்களில் போட்டிகள் நடந்தன.

டிச. 19உ நகர் திரிசாரணர் படையின் இரண்டாண்டு நிறைவு விழா, மதுரை, அன்னக்குழி மண்டபத்தில் நடைபெற்றது. மதுரை ஜில்லா நீதிபதி, உயர் திரு. S. ரெங்கராஜன், M. L. அவர்கள் தலைமை தாங்கிச் சிறப்பித்தார்கள். படையின் அறிக்கையை ரோவர் லீடர் ஸ்ரீ C. N. சேதுராமன் வாசித்த பின்பு, ஸ்ரீ M. ராஜகோபாலன், S. O. C. அவர்கள் 'இன்றைய இளைஞர்' என்பது பற்றி அரிய சொற்பொழிவாற்றினர். மதுரை ஜில்லா சாரணர் சங்க உபதலைவர் ஸ்ரீ T. K. ராமா M. L. A., ஜில்லாக் கமிஷனர், டாக்டர். K. G. ராமபத்ரன் ஆகியோரும் பேசிய பிறகு விளையாட்டு, சாரணீயப் போட்டிகளில் வெற்றி பெற்ற திரிசாரணர்களுக்கு ரிப்பன் பரிசுகள் தலைவரால் வழங்கப்பட்டன. ரோவர் லீடரின் வந்தனோபசாரத்திற்குப் பின், இந்திய சர்க்கார் செய்தி—ஒலி பரப்பிலாகா அதிகாரி ஸ்ரீ A. V. ஜெயச்சந்திரன் அவர்களின் மேற்பார்வையில் திரைப்படக் காட்சி யொன்று விமரிசையாக நடைபெற்றது. ஸ்ரீ R. V. ராகவன் A. R. S. L. கவனிப்பில் விழாவிற்கு விசேஷ அலங்காரங்கள் திரிசாரணரால் செய்யப்பட்டிருந்தன. பெற்றோரும், நண்பர்களும், ஜில்லா சங்க நிர்வாகிகளும திரளாக விஜயம் செய்திருந்தனர்.

டிச. 22உ மதுரை ஜில்லா சங்கத்தின் வருஷாந்திரப் பொதுக்கூட்டம், அக்கிராசனர் ஸ்ரீ T. S. ராஜம் அவர்களின் தலைமையில் அன்னக்குழி மண்டபத்தில் நடைபெற்றது. வருட அறிக்கையும், ஆடிட் செய்த கணக்குகளும் கௌரவ காரியதரிசி ஸ்ரீ A. K. ராஜகோபாலன் அவர்களால் வாசிக்கப்பட்டன. புதிய வருஷத்திற்கு ஸ்ரீ T. S. ராஜம் அவர்களே தலைவராகவும், ஸ்ரீமான்கள். R. நாகராஜ், T. K. ராமா M. L. A., ஆகியோர் உப தலைவர்களாகவும், படைத்தலைவர்களும், மற்றையோருமடங்கிய நிர்வாகக் கமிட்டியினரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

உபதலைவர் ஸ்தானங்களில் ஒன்று பெண்கள் பகுதிக்காக ஒதுக்கி வைக்கப்பட்டது.

புதிய நிர்வாகக் கமிட்டியின் முதல் கூட்டம் டிச. 26உ அன்னக்குழிமண்டபத்தில் நடைபெற்றது. ஸ்ரீ T. S. ராஜம் அவர்கள் தலைமை வகித்தனர். ஏற்கனவே ஜில்லா சங்க பொக்கிஷதாராயிருந்த ஸ்ரீ K. L. N. கிருஷ்ணன் அவர்கள் மீண்டும் பொக்கிஷதாராகவும், கௌரவ காரியதரிசியாகவும், மிஸஸ். A. S. மஹாராஜா அவர்கள் பெண்கள் பகுதி உதவிக்காரியதரிசியாகவும், ஸ்ரீ R. V. ராகவன் அவர்கள் சிறுவர் பகுதி உதவிக்காரியதரிசியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பற்பல சப்கமிட்டி அங்கத்தினர்களும் நியமிக்கப்பட்டனர்.

சேதுபதி ஹைஸ்கூல், சிவாஜி படையினர் டிச. 30உ பசுமலைக் கடுத்த விளாச்சேரியில் சாரணாசிரியர் ஸ்ரீ K. S. கிருஷ்ணன் M. A. B. T. தலைமையில் முகாம் செய்தனர். நகர் சாரண அமைப்பாளர் ஸ்ரீ K. S. சம்பத் பயிற்சிகளில் உதவினர். அன்றிரவு நடைபெற்ற தீவட்டத்திற்கு, மதுரை நடுவட்டார உதவிக்கமிஷனர் ஸ்ரீ P. S. ராமசுப்பிரமணியம் B. A. B. L. தலைமை வகித்தார். முனிசிபல் கவுன்சிலரும், ஜில்லாச் சாரணர் கமிட்டி மெம்பருமாகிய ஸ்ரீ V. S. ராமசுப்பிரமணியம் B. A. B. L. அவர்களின் அன்பார்ந்த ஆதரவுடன் முகாம் சீராக நடைபெற்றது. மறுநாட் காலை முகாம் முடிவுற்றது.

ஸௌராஷ்ட்ர ஹைஸ்கூல், அசோகாபடையினர் ஜனவரி 2, 3, 4ம் தேதிகளில் அழகர்கோவிலில் முகாம் செய்தனர். சாரணாசிரியர் ஸ்ரீ M. K. ராமமூர்த்தி B.A.B.T. தலைமையில் பற்பல பயிற்சிகள் நடைபெற்றன. 3உ நடைபெற்ற சின்னம் சூட்டு விழாவின் போது ஹைஸ்கூல் கௌரவ காரியதரிசி ஸ்ரீ K.R.V. சீதாராம் B. A. B. L. உதவித் தலைமையாசிரியர் ஸ்ரீ J. L. சுந்தரராமன் B.A.L.T. ஆகியோர் முகாமுக்கு விஜயம்செய்திருந்தனர். ஸ்ரீ M. R. கிருஷ்ணமூர்த்தி குவார்ட்டர் மாஸ்டராகயிருந்தார்.

ஜன. 5உ வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு ஸ்ரீ கூடலழகர் கோவில் ஸ்ரீ பிரசன்ன வேங்கடேசர் கோவில்களில் ஸ்ரீ K. S. சம்பத் C. S. O. தலைமையில் சாரணர் சேவை செய்தனர். நகர் திரிசாரணர், விவேகானந்தா, சிவாஜி, அசோகா, சரஸ்வதி, செயிண்ட் மேரி, மாதவன், யுவ ஹார்வி, மீனாட்சி, ஆரப்பாளையம் திரிசாரணர் படைகளிலிருந்து உதவிக்கமிஷனர் ஸ்ரீ V. ராமானுஜம் அவர்களின் ஏற்பாட்டில் சாரணரும், படைத்தலைவர்களும் வந்து கலந்து கொண்டனர். வழி தவறியநான்கு குழந்தைகள் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

மதுரை, ஸ்ரீ ராமகிருஷ்ண ஸமாஜத்தினுராவில் டிச. 30உ முதல்

ஜன. 6௳ வரை நவபத்கானுதெரு ஞான மந்திரத்தில் நடைபெற்ற ஸ்ரீமத் பகவத்கீதா ஸப்தாஹம், கீதாயக்ஞம், கீதா ஊர்வலம் ஆகிய வைபவங்களின்போது கூடிய ஏராளமான மக்களை ஒழுங்கு படுத்தும் பணியில் அசோகா, காந்திஜி படையினர் உதவி செய்தனர்.


வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

# பாரத் சாரணர் நாட்குறிப்பு.

# 1955

தமிழில் சாரணச் சிறுவர், சிறுமிகளுக்கு வேண்டிய

★ சாரணீயக் குறிப்புக்களோடும் ★

நேஷனல் ஆர்கனேசிங் கமிஷனர்

**திருவாளர் ஸ்ரீராம் பாஜ்பாய் அவர்களின்**

ஆசிச்செய்தியோடும் வெளி வந்துள்ளது.

ஏறக்குறைய 220 பக்கங்களுடையது.

தபால் செலவு பிரத்தியேகம்.

**இதன் விலை அணு ஒன்பது.**

கிடைக்குமிடம்:-

**மதுரை ஜில்லா பாரத் சாரணர் சங்கம்,**

41, வடக்காவணிமூல வீதி, மதுரை.

# ரிஸோபாம்.

தலைவலி, ஜலதோஷம், நரம்புவலி, தசைநோய், பல்வலி முதலியவைகளுக்கு கைகண்ட மருந்து. மேற்கண்டவைகளுக்கு ரிஸோபாம் நல்லகுணமளிக்கும்.

தயாரிப்பு:

**லூதர்ன் ரிஸர்ச் லாபரட்டரி,**

பூர்ண விநியோகஸ்தர்கள்:


**SP. M. மெடிக்கல் மார்ட்,**

15, கீழச்சித்திரை வீதி, :: :: மதுரை.



Edited & Published by J. D. Asirvatham for The Bharat Scouts & Guides, Madurai District. Printed by Sri Krishna Press, 1, Manjanakara Street, Madurai.

# SAVE ON TYRES...




# RETREAD

*Sundaram Industries retread all popular passenger car and truck tyres using full circle moulds and modern technique. Their ten years retread experience is at your service.*

*Insist on retreading your tyres with full circle moulds with new shoulders and nonskid treads.*

**SUNDARAM INDUSTRIES LTD.**

(PUDUKKOTTAI. (UNIT OF T. V. S.)

Regd. No. M. 6116.

பருத்தி நூல்களுக்குப் பிரதான ஸ்தாபனம்.

# மதுரை மில்ஸ் கம்பெனி லிமிடெட்.

போன் 250 (4 லைன்) மதுரை. தந்தி: "ஹார்வி"

மதுரை — தூத்துக்குடி — அம்பாசமுத்திரம்.

| 5,00,000. நூற்கும் கதிர்கள் | நாங்கள் சப்ளை செய்வது | நெம்பர் 80 வரை நூல்கள் |
|---|---|---|

கைத்தறி, இயந்திரத்தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக்கேற்ற வார்ப்பு நூல்கள் கனத்த வெப்பிங், கான்வாஸ் முதலிய வைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக்கேற்ற மிருதுவான சன்ன நூல்கள்.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை.

மானேஜர்கள் :

## ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

போன் : 420 (4 Lines) மதுரை. தந்தி: "ஹார்வி"